Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விஸ்வஜோதி

ஆடி 1988

இலங்கை விஸ்வகர்ம சங்க வெளியீடு

தனிப்பட்ட விநியோகத்துக்கு மட்டும்

**VISVAJOTHY — Published by the CEYLON VISVAKARMA SANGAM**

**- For Private Circulation Only -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விஸ்வகர்ம சங்கம்

## ஜூன் 1988 - மே 1991 வரை உத்தியோகத்தர் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைவர் | திரு. | S. தியாகராஜா |
| 2. | உப தலைவர் | ,, | S. சிவானந்தன் |
| 3. | செயலாளர் | ,, | T. பாலசுப்ரமணியம் |
| 4. | உப செயலாளர் | ,, | N. சாந்திகுமார் |
| 5. | பொருளாளர் | ,, | N. விவேகானந்தன் |
| 6. | உப பொருளாளர் | ,, | T. நமசிவாயம் |
| 7. | கட்டிட நிர்வாகஸ்தர் | ,, | S. தங்கம் ஆச்சாரி |
| 8. | வாசிகசாலை அதிபர் | ,, | S. ஈஸ்வரமூர்த்தி |
| 9. | பத்திரிகை ஆசிரியர் | திருமதி | M. தியாகராஜா |

## ஜூன் 1988 - மே 1989 வரை செயற்குழு பட்டியல்

| | | |
|---|---|---|
| 10. | திரு. | S. செல்வரட்னம் |
| 11. | ,, | S. சங்கர் |
| 12. | ,, | T. கிருஷ்ணநாதன் |
| 13. | ,, | A. கணபதி ஆச்சாரி |
| 14. | ,, | S. ஹரி ரட்ணு |
| 15. | ,, | S. ராமச்சந்திரன் |
| 16. | ,, | S. சுப்பையா |
| 17. | ,, | M. கதிர்வேல் |
| 18. | ,, | S. கதிர்வேல் ஆச்சாரி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வபிரமனே நம:

# விஸ்வஜோதி

தீபம் 3 சுடர் 1

அன்புடையீர் !

கடந்த 19-6-88 அன்று நடைபெற்ற 69வது ஆண்டு பொதுக் கூட்டத்தில் மீண்டும் என்னை விஸ்வஜோதிக்கு ஆசிரியையாக தெரிவு செய்தமைக்கு முதற்கண் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இலங்கையிலுள்ள விஸ்வகர்ம சமூகத்தினதும் இலங்கை விஸ்வகர்ம சங்கத்தினதும் பிரதிபலிப்பு விஸ்வஜோதியாகும். எனவே இப்பெரும் பொறுப்பை, என் மீது நம்பிக்கை வைத்து தந்தமைக்கு நான் பெருமையடைகின்றேன். தங்கள் அனைவரது நம்பிக்கையும் வீண்போகாத விதம் என் கடமைகளையாற்ற தங்கள் அனைவரதும் ஆசிகளையும், ஆதரவையும், ஒத்துழைப்பையும் வேண்டிக்கொள்கின்றேன்.

விஸ்வஜோதி வாசகர்கள் அனைவருக்கும் அடுத்து என் நன்றியைக் கூற விரும்புகிறேன். காரணம் எனக்கு வரும் கடிதங்களின் கருத்துக்களும் எண்ணிக்கையும் என்னை பிரமிப்பில் ஆழ்த்தின. தங்கள் அனைவரது கடிதங்களைப் படிக்கும்போது, நம் சமூகத்தின் மீதும், இலங்கை விஸ்வகர்ம சங்கத்தின் மீதும் அதன் வெளியீடான ''விஸ்வஜோதி'' மீதும் தாங்கள் கொண்டுள்ள அபிமானத்தையும் அக்கறையையும் காணக்கூடியதாக உள்ளது. தங்கள் அனைவரது ஆர்வம், அக்கறை, ஊக்கம், ஆசிகள், விமரிசனம் என்பன எங்களுக்கு என்றும் உள்ளன என எதிர்பார்க்கின்றோம்; சொல்லிலுல் மட்டுமல்ல; செயலிலும்கூட ! நன்றி.

மேலும் ஒரு விஷயம் உங்கள் ஒவ்வொருவருக்கும் நான் தனித்தனியாக பதில் எழுத இயலாமைக்கு வருந்துகின்றேன் அதே சமயம் இடவசதி, பொருள்வசதி காரணமாக அத்தனை (நீண்ட) கடிதங்களையும் விஸ்வஜோதியில் பிரசுரிக்க இயலாமைக்கும் வருந்துகின்றேன். எம்மால் இயன்ற அளவு அவற்றின் சாராம்சங்களையும், அவற்றுககான பதில்களையும் விஸ்வஜோதியில் வெளியிடுவோம். ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றேன். தங்கள் அனைவருக்கும் தெரியுமோ என்னவோ, 'விஸ்வஜோதி' ஒரு இலவச வெளியீடு. அதில் வெளிவரும் விளம்பரங்களின் மூலம் கிடைக்கும் தொகையைக் கொண்டே இது வெளியிடப்படுகின்றது. அதனை அங்கத்தவர்களுக்கும் மற்றவர்களுக்கு அனுப்புவதற்கு தபால் செலவு தனியாக உண்டு. மேலும் இது ஒரு சமூக சேவையாகவே வெளியிடப்படுகின்றது. சங்க நடவடிக்கைகளை உங்களுடன் பரிமாறிக்கொள்ளவும், தங்கள் கருத்துக்களை மற்ற சமூகத்தவருடன் பகிர்ந்து கொள்ளவும், நல்ல விஷயங்களை அறிந்துகொள்வதுவுமே இதன் நோக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல அன்பர்கள் நிறைய எழுதி அனுப்பியுள்ளார்கள். அவர்கள் அனுப்பியுள்ள அத்தனை கட்டுரைகளையும் ஒரே இதழில் வெளியிடுவது சாத்தியமில்லை. இந்த இதழில் இல்லாமல்விட்டால், கண்டிப்பாக அடுத்த இதழில் வெளிவரும். அதனால் மனம் தளராது உற்சாகத்துடன் அனைவரும் மேலும் மேலும் உங்கள் கற்பனைத்திறனை கைவரிசையில் காட்டி எமக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

எமக்குக் கடிதம் எழுதியவர்களில் குறிப்பிடக்கூடியவர்கள் பட்டியல் வருமாறு :-

1. ஸ்ரீ இரா. மகாதேவா பத்தர் சண்முகநாதன் - தங்கள் நீண்ட கடிதங்கள் அனைத்துக்கும் நன்றி, தங்கள் ஆர்வமும் ஆசிகளும் எம்மை உற்சாகமூட்டுகின்றன. சங்கப் பிரமாணங்களின்படி நிர்வாகம் நிகழும் வருடம் ஜூன் மாதம் 1ம் திகதி முதல், அடுத்த வருடம் மே மாதம் 31ம் திகதி வரையுமாகும்.

உ - ம் ஜூன் 1986 - மே 1987 - தீபம் - 1
ஜூன் 1987 - மே 1988 - தீபம் - 2
ஜூன் 1988 - மே 1989 - தீபம் - 3

இவ் வருடங்களில் வெளிவரும் விஸ்வஜோதி இதழ்கள் முறையே சுடர் - 1, சுடர் - 2, என்று வெளிவரும். வருடம் 2 அல்லது 4 இதழ்கள் வெளிவரலாம். இவ் வருடம் தீபம் -.3, இது சுடர் - 1 அடுத்தது தீபம் - 3 சுடர் - 2, சுடர் - 3 என்று வரும்-விளக்கம் தெளிவுதானே?

2. ஸ்ரீ N. ஜெயகுமார் - தங்கள் அபிப்பிராயங்களுக்கு நன்றி

3. திருமதி இராமையா மங்கையர்கரசி - தங்கள் உணர்ச்சிமயமான மடலுக்கு நன்றி கலந்த வணக்கம்.

4. மற்றும் திரு. 'ரிஷி', திரு. ச. நாராயணசாமி, திரு. க. பிரேம் ஆனந்த் ஆகியோரும் எமக்கு கடிதங்கள் அனுப்பியுள்ளார்கள், நன்றி.

இச்சந்தர்ப்பத்தில் நான் கதை, கட்டுரை, கவிதை துணுக்குகள் போட்டிகள் எழுதியனுப்பும் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, விரைவில் அடுத்த இதழுக்கு வேண்டியவற்றை தாங்களும் எழுதி, மற்றவர்களையும் எழுதவைத்து அனுப்புவீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

**திருமதி மல்லிகா தியாகராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் செய்தி

அன்புள்ள அனைவருக்கும் எனது வணக்கம்!

இறைவன் திருவருளால் எமது சங்கத்திற்கான புதிய கலாச்சார மண்டபம் விரைவில் கட்டப்படவுள்ளது.

நிகழும் விபவ வருடம் ஆவணி மாதம் 3ம் திகதி, வெள்ளிக் கிழமை **(19-8-1988)** காலை 8:05 முதல் 9:17 மணி மணிவரை வரும் கன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில் பிரதேச அபிவிருத்தி, இந்து சமய, இந்து கலாசார, தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சர்

**மாண்புமிகு செல்லையா இராசதுரை** அவர்கள் தலைமையில்

இலங்கை விஸ்வகர்ம சங்க கட்டிட அடிக்கல் நாட்டு விழா விமரிசையாக நடைபெற உள்ளது. அத்தருணம் அனைவரும் வந்து கலந்துகொள்ள வேண்டி செயற்குழுவின் சார்பில் அன்புடன் அழைக்கின்றேன்.

மேலும் இக் கட்டிடம் விரைவில் பூர்த்தியாகி, நம் தேவைகள் நிறைவுபெற, உங்கள் அனைவரது ஆசிகளையும் பெரும் ஆதரவையும் வேண்டிக்கொள்கின்றேன். அனைவரும் வாரி வழங்குவீர்கள் என்று நம்புகிறேன்.

நன்றி !

இங்ஙனம்,

**S. தியாகராஜா**

(தலைவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைபிடிப்பதனுல் ஏற்படும் தீமைகள்

டாக்டர். என். ஜெயகுமார்

ஒருவர் தொடர்ந்து புகைபிடிப்பவராக இருந்தால், பிற்காலத்தில் அவருக்கு ஏற்படக்கூடிய விளைவு பலவாக அமைகின்றது. அவற்றில் முக்கியமான ஒன்றை நான் இங்கு தருகின்றேன்.

சாதாரணமாக ஒருவரது காலில் ஏற்படும் புண்ணுனது தொடர்ந்து இருக்குமிடத்து சற்று அதைப் பற்றி சிந்திக்க வேண்டும். ஒன்று சிறுநீர் பரீட்சை மூலமும் அல்லது இரத்தத்திலுள்ள சீனியின் அளவின் மூலமும், இரவில் அவர் அடிக்கடி சிறுநீர் கழிப்பவராக இருப்பதன் மூலமும் தாகம் நிறைந்தவராகக் இருந்தாலும் அவரை நாம் மதுமேகம் "Diabetic Mellitus" என்னும் நோயினுல் பாதிக்கப்பட்டவராகக் கருதலாம். ஆனுல் கால்களின் கீழ்ப்பகுதி கறுத்து, உணர்வற்று காணப்படுமாயின் மிகுந்த கவனத்துடன் நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

ஏனெனில் இது ஒரு அசாதாரண நோயாகும். இது ஆங்கிலத்தில் Thrombonangitis obliterans எனவும், Buerger's disease எனவும் அழைக்கப்படும். இது பொதுவாக 40, 45 வயதுகளில் ஆரம்பமாகும். கூடுதலாக ஆண்களிலே காணப்படுகின்றது. இதற்கான முக்கிய காரணம் புகைபிடித்தல் ஆகும். நாடிகளின் சுவர்களானது Polymorphs எனும் பொருளால் ஊடுருவி காணப்படுவதோடு, அது ஒரு திடப்பொருளாக மாறி, அந்த இரத்தநாடியை அடைக்கக்கூடும் அத்தோடு அதன் அருகாமையிலுள்ள நாளங்களும் பாதிக்கப்படும் அதைத்தொடர்ந்து, குறிப்பிட்ட அவயவத்திற்கு விநியோகிக்கப்படும். குருதியின் அளவு குறையத் தொடங்கும். இதனுடன் குருதியின் முக்கிய செய்கைகளில் ஒன்ருகிய பிராணவாயுவின் (Oxygen) விநியோகமும் மட்டுப்படுத்தப்படுகின்றது. இதன் காரணத்தால் குறிப்பிட்ட அவயம் நீலம் பாரிப்பதுடன் (Cyanosis) உஷ்ணத்தையும் படிப்படியாக இழக்கின்றது. இக்கால கட்டங்களில் முக்கியமாக கால் பெருவிரலானது பாதிக்கப்படுகின்றது இதன் காரணமாக வேதனையும், அவ்வயயத்தின் சாமானியத் தன்மையும் படிப்படியாக அற்று (Atrophic changes) இறுதியில் அவ்வயம் பழுதடைந்து விடும். (Intermiltent Clavdication). நாளங்களும் இதில் பாதிக்கப்படுவதால், அடிக்கடி நாளங்களினுள்ளே தடை ஏற்படுகின்றது.

இதற்கான சிகிச்சையானது குறிப்பிடத்தக்க அள்வில் இல்லாதுவிடினும், முக்கியமாக உடனடியாக புகைப்பிடிப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். அதைத் தொடர்ந்து சராசரி ஒரு நாளைக்கு 10 தடவைவிதம் காலை, மாலை, பகல் சுவாசப் பயிற்சியில் ஈடுபடல் வேண்டும் (Deep breathing).

மேற்கண்ட நிலைமை தீவிரமாக காணப்படுமிடத்து கால்களில், தீ, காயம்பட்ட புண்களைப்போன்று காணப்படுமிடத்து, காலின் பாதிக்கப்பட்ட பகுதியை அறுவை சிகிச்சையின் மூலம் நீக்கப்படல் வேண்டும்.

எனவே இதை வாசித்தப்பின்னராவது புகைப்பிடிப்பதை முடிந்தளவு தவிர்த்துக் கொள்ளப் பழகிக் கொள்ளவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அபர்ணு'

விஸ்வரூபன்

அகிலாண்டகோடிப் பிரஹ்மாண்டங்களின் நாயகியான ஆதிபராசக்தி, ஸ்ரீலலிதா பரமேஸ்வரியின் ஆயிரம் பவித்ர திருநாமங்களைக்கொண்டது ''ஸ்ரீலலிதா ஸகஸ்ரநாமம்'' என்னும் கிரந்தம் அந்த நாமங்களில் எழுநூற்றி ஐம்பத்துநான்காவது (754) நாமம்தான் ''அபர்ணு'' ...................... சாதாரணமாக இலையைக்கூட உண்ணுதவள் என்னும் கருத்தையே அபர்ணு குறிக்கும் ''பர்ண'' என்னும் வடமொழிச் சொல்லின் கருத்து இலை என்பதே.

புராணக்கதைகளின்படி மலையரசனுன ஹிமவானுடைய புதல்வியாக அவதரித்த பார்வதிதேவி பரமசிவனைப் பதியாக அடைவதற்காக கடும் தவம் செய்தாள். தவத்தின் உச்சகட்டத்தில் எதுவித உணவையுமே உட்கொள்ளாமல் - அதாவது பழங்கள், இலைகள், ஜலம் முதலியவைகளைக்கூட அறவே ஒதுக்கிவிட்டு எதுவித ஆகாரமுமின்றி உக்கிரமான தவத்தைப்புரிந்தாள் ஈற்றில் பிரபஞ்ச நாயகனுன பரமன், ஈஸ்வரியின் தவத்தைக்கண்டு மகிழ்ந்து அவளை மணந்துகொண்டான்.

ஆனுல் அந்தக் கருத்து ''அபர்ணு'' என்னும் சொல்லின் உண்மையான வியாக்யானமாகத் தோன்றவில்லை. தனது பக்தர்களைக் கடன் தொல்லையிலிருந்து விடுவிப்பவள் என்பதுதான் அதன் உண்மையான பொருளாகும். ரிண (RNA) என்னும் சொல்லின் பொருள் 'கடன்' என்பதாம் இக்கருத்தை நிரூபிப்பதற்காக ஸ்ரீ பாஸ்கரராயர் என் பவருடைய வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு சம்பவம் மேற்கோளாகக் காட்டப்படுகின்றது.

பாஸ்கரராயர் என்பவர் ஒரு சிறந்ததேவி உபாசகர் சாக்த தந்திரப்பிரவீணர் ஸ்ரீலலிதா ஸகஸ்ரநாமத்திற்குப் பாஷ்யம் எழுதியவர். ஸ்ரீவித்யா உபாஸனை சம்பந்தமான ஒப்பற்ற நூலான ''வாரிவஸ்யா ரஹஸ்யம்'' என்னும் சாஸ்திரத்தை ஆக்கியோன். அவர் வடஇந்தியாவில் மஹாராஷ்ட்ர மாநிலத்தில் பிறந்தவர். அவர் தனது வாழ்க்கையின் பிற்பகுதியில் தென்னிந்தியாவிலுள்ள மத்யார்ஜீனம் என்றும் ஊரில் வசித்து வந்தார். அங்கு வாழ்ந்து வந்த காலத்தில் தனது இஷ்ட தேவதையான அம்பிகையின் பூஜா கலாபங்களில் உபயோகிப்பதற்காக தங்கத்தினுலான ஒரு கலசம் செய்வித்தார் அதற்குத் தேவைப்பட்ட பணத்தை அங்குள்ள ஒரு லேவாதேவிக்காரரிடம் கடன் பெற்றிருந்தார். ஆனுல் மாதங்கள் பலவாகியும் குறித்த காலத்தில் அந்தக்கடனை அவரால் திருப்பிக் கொடுக்க முடியவில்லை.

ஒரு நாள் - அன்று வெள்ளிக்கிழமை ஸ்ரீராயர் அம்பிகைக்கு பூஜை செய்து கொண்டிருந்தார். ஜகன்மாதாவின் ஆயிரம் திருநாமங்களால் நறுமலர்களைக்கொண்டு அர்ச்சித்துக்கொண்டிருந்தார். அந்த வேளையில் அவருக்குக் கடன் கொடுத்திருந்த அந்த லேவாதேவிக்காரர் அங்கு வந்து கடுங்கோபத்துடன், ''ஓ ராயா! நீ ஒரு மனிதனு? நீ ஒரு யோக்கியனு? வாங்கிய கடனைத் திருப்பித்தர முடியாத உனக்கு ஒரு பூஜை வேண்டிக்கிடக்கா? உனது தெய்வம்கூட உன் பூஜையை ஏற்குமா?'' என்று கத்திவிட்டுப் போய்விட்டான் அப்பொழுதுதான் ராயர் தேவியின் 754வது நாமமான ''அபர்ணு'' என்னும் நாமத்தை உச்சரிக்க இருந்தார்.

கடன்காரன் போட்ட கூச்சலினுலும் கடுசொற்களினுலும் மனம் நொந்துபோன ராயர், பின்வரும் கருத்தைக்கொண்ட சுலோகத்தைச் சொல்லிவிட்டு பூஜையைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தார். "ஓ சிவே! நான் கடன்காரன்தான். என்றால் அர்ச்சிக்கப்பெற்ற அர்த்தம் பொதிந்த அந்தச் சொல் உன் இதயத்தில் கருணையை உண்டுபண்ணவில்லையா?" என்பதே.

அன்றைய ஆராதனைகளை முடித்துக்கொண்டு ராயர் எழுந்து வெளியே வந்த பொழுது அந்தக் கடன்காரனின் மனைவி அவரிடம் ஓடோடியும் வந்து "ஐயா எனது கணவர் இந்தக் கடன்பத்திரத்தைத் தங்களிடம் கொடுக்கச்சொல்லிப் பணித்தார். தாங்கள் கொடுக்கவேண்டிய கடன்தொகையை வரவு வைத்துக்கொண்டு இதைக் கொடுத்தார்". என்றாள் கடன் பத்திரத்தை வாங்கிப்பார்த்துவிட்டு ராயர் கேட்டார்,

"அம்மணி, எனது கடனை யார் கொடுத்தார்கள்? எனக்கு ஒன்றும் தெரியாதே" என்றார்.

"ஏன் தங்களது தர்மபத்தினிதானே சற்றுமுன் எங்கள் வீட்டுக்கு வந்து பணத்தைக் கொடுத்தார்கள். இப்போதுகூட அவர் என் கணவருடன் கதைத்துக்கொண்டிருக்கிறார், உங்களுக்கு ஒன்றும் தெரியாதே என்பதைக் கேட்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறதே" என்றாள்.

வியப்பு மேலிட்டவரான ராயர், "என்னது, எனது மனைவியா கொடுத்தாள்? என்றால் இதை நம்ப முடியவில்லையே! என் மனைவி அந்தக் கடன் தொகையை ஒழுங்கு பண்ணுவதற்காக வடஇந்தியாவுக்குப் போயிருக்கிறாளே. திரும்பிவர மூன்று மாதங்களாவது செல்லுமே" என்றார்.

"ஐயா, நீங்கள் என்னை நம்பவில்லையென்றால் என்னுடன் எங்கள் வீட்டுக்கு வாருங்கள். அங்கே உங்கள் மனைவி எனது கணவரிடம் பேசிக்கொண்டிருக்கிறாள்" என்றாள்.

ராயரும் அவளுடன் அவர்கள் வீட்டுக்குச் சென்றார். அந்த வீட்டை அடைந்ததும் அங்கே எவரையும் காணவில்லை. அந்த கடன்காரன் ராயரிடம் வந்து. "ஐயா தங்கள் மனைவி இப்பொழுது சிறிது நேரம்வரைகூட இங்கேதான் நின்றிருந்தார்கள்" என்று சத்தியம் பண்ணிச் சொன்னான்.

அப்பொழுதுதான் ராயருக்கும் மற்றவர்களுக்கும் பாராம்பிகையான அன்னை லலிதாம்பிகையே அங்கு வந்து கடன் பணத்தைக் கொடுத்திருக்கிறாள் என்ற உண்மை புலப்பட்டது. அதன்மூலம் "அபர்ணா" என்னும் நாமத்தின் தாத்பரியத்தை நிருபித்துவிட்டாள் அகிலாண்ட பகிரண்டங்களின் நாயகி அப்பொழுதிலிருந்து லலிதா சஹஸ்ரநாம பாராயணம் பிரசித்தமடைந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் அறிக்கை

எமது லட்சியம் புதிய கலாச்சார மண்டபம் திட்டம் மூன்று மாடியுடனான நவீன வசதிகளுடனான கட்டிடம். தேவைப்படும் தொகை உத்தேச மதிப்பு ரூபா 21 லட்சங்கள். இதற்கான ஆரம்ப வேலையாக திறமைமிக்க பொறியியலாளர், கட்டட கலைஞர்களுடன் கலந்துரையாடி ஆலோசித்து வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. நிர்வாக குழுவினர் அங்கீகாரம் பெற்றவுடன் கொழும்பு மாநகரசபை, நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் அங்கீகாரத்துடன் பணம் வசூலிப்பதில் எமது முழு கவனத்தையும், முயற்சியையும் செலுத்துவோம். இதுவரை நிர்வாககுழுவினர் பணம் வசூலிக்க நான்கு முறைகளைத் தெரிவு செய்துள்ளனர். அவைகள் - (1) நன்கொடைகள் பெறுவதன் மூலம் (2) ரூபா 10/- பெறுமதியான டிக்கட் விற்பனை மூலம் (3) நம் இனத்தவர்களின் வியாபார ஸ்தாபனங்களில் சங்க உண்டியில் வைத்து பணம் சேர்ப்பதன் மூலம் (4) உள்ளூர், வெளியூர் கலைஞர்களைக்கொண்டு கலைநிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம்.

இவைகளைத்தவிர உங்களனைவரின் ஆலோசனைகளையும் ஆதரவையும் வரவேற்கின்றோம். எமது இந்த லட்சியம் நிறைவுபெற உங்கள் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு மிக மிக முக்கியம் எம் இனத்தவர் சகலரினதும் கௌரவத்திற்கும், மதிப்பிற்கும் எடுத்துக் காட்டாக விளங்கப்போகும் இக்கட்டிடத்தை எழுப்பவேண்டும் என்ற எண்ணம் எம் சமூகத்தவர் சகலரினதும் உள்ளங்களில் உதிக்கவேண்டும்; உறுதிகொள்ளவேண்டும்.

கட்டிடத்திற்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு வருமானவரி விலக்குபெற முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சங்கக் கட்டிடத்தில் குடியிருந்த மிகுதி ஒரு குடியிருப்பாளரையும் வெளியேற்றி பூரணமாக கட்டிடத்தைப் பொறுப்பேற்றுள்ளோம். சங்கக்கட்டிடத்தில் கடமையாற்றிய தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக சங்கத்திற்காக நிரந்தரமான தொரு ஊழியரை நியமித்துள்ளோம். இதனால் கணிசமானதொரு தொகை சேமிக்கப்படும்.

31 - 1 - 1988ம் திகதி கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழகத்துடன் இணைந்து, இரத்த தானம், கண்தானம், மருத்துவ ஆலோசனை, மருந்துகள், மூக்குக்கண்ணாடிகள், 500 ஏழைகளுக்கு உணவு பொட்டலங்கள் முதலியன இலவசமாக வழங்கப்பட்டன. இரத்ததானம் செய்தவர்களுக்கு நானாவித அன்பளிப்புப் பார்சல்கள் 100 வழங்கப்பட்டன.

பின்தங்கிய எமது இனத்தின் மறுமலர்ச்சி, நல்வாழ்வு, ஒற்றுமை, கௌரவம் இவைகளைக் கருத்தில்கொண்டு, எமது சங்கத்தின் வளர்ச்சிக்காக 68வது ஆண்டு செயற்குழுவினர் தீவிரமாக செயல்பட்டுவருவது யாவரும் அறிந்ததே. அவர்களின் செயல் திட்டங்கள் விரைவில் நிறைவேற எமக்குள் உள்ள கருத்து வேறுபாடுகள், அலட்சிய மனப்பான்மை, ஒதுங்கியிருக்கும் குணம் அனைத்தையும் மறந்து ஒவ்வொருவரும் இப்பணியை தனது சொந்த காரியமாக, குடும்பவிடயமாகக் கருதி, எதிர்கால எமது சந்ததியினரின் நலன் கருதி, சுயகௌரவத்தைக் கருதி, சமூக, இன உணர்வோடு ஒவ்வொருவரும் தன்னால் முடிந்த பங்களிப்பினைச் செய்தால், நாம் எதிர்பார்க்கும் காலகட்டங்களுக்கு முன்பே எமது கட்டிடம் கம்பீரமாகக் காட்சியளிப்பதை அனைவரும் காணலாம் என்பது என் கருத்து. ஆண், பெண், சிறியோர், பெரியோர், வசதிபடைத்தவர், வசதியற்றவர் என்ற பாகுபாடில்லாமல் எமது இனத்தவர் அனைவரும் நம் எல்லோரின் லட்சியமாகிய கலாச்சார மண்டப நிர்மாண வேலைகளுக்கான பொருளுதவியைத் தாராளமாக வாரி வழங்குவீர்கள், வழங்கவேண்டும் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகின்றேன்.

வணக்கம்.

எஸ். செல்வரத்தினம்

செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஸ்வகர்மரே ஜெகத்குருமார்

**ச. நாராயணசாமி**

சுமார் 45 அல்லது 50 ஆண்டுகளுக்கு முன் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள் தென்னாட்டிலுள்ள பல இடங்களுக்கும் விஜயஞ் செய்து கொண்டிருந்தபோது திருவேரஹம் என்னும் சுவாமி மலைக்கும் சென்றிருந்தார். அங்குள்ள மடத்தில் சில தினங்கள் தங்கியிருந்து அவ்வூர் மக்களுக்குப் பல திவ்விய உபந்நியாசங்களைச் செய்தார், அநேக பக்தர்கள் சுவாமிகளைத் தரிசித்து அவரது ஆசியும் விபூதிப் பிரஸாதமும் பெற்றுச் சென்றார்கள் சுவாமிகளிடம் விபூதிப் பிரஸாதம் பெறுவதாயிருந்தால் அவர்களைச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்துவிட்டுத்தான் பிரஸாதம் பெறவேண்டுமென்பது சம்பிரதாயம்.

ஒருநாள் அவ்வூர் பிரபல விக்கிரஹ நிர்மாண விற்பன்னரான சோமசுந்தர ஸ்தபதியென்பவர் சுவாமிகள் தங்கியிருந்த மடத்துக்கு முன்னால் வந்துகொண்டிருந்தபோது அங்கு நின்று கொண்டிருந்த அவ்வூர் பிரமுகர் ஒருவர் ஸ்தபதியாரைப் பார்த்து ''ஸ்தபதியாரே தாங்களும் ஆச்சாரிய சுவாமிகளைத் தரிசித்து பிரஸாதம் பெற்றுக்கொள்ளலாமே'' என்று கேட்டார். ஸ்தபதியாருக்குத் தர்ம சங்கடமாகிவிட்டது. ஊர் பெரிய மனிதருடைய அதிருப்திக்கு ஆளாகக் கூடாது என நினைத்து உள்ளே சென்று சுவாமிகளுக்கு முன்னால் நின்று இரு கைகளையும் கூப்பி வணங்கிவிட்டு விபூதிப் பிரஸாதத்திற்காக தனது கைகளை நீட்டினார். அப்போது சங்கராச்சாரிய சுவாமிகள் அவரை விழித்து ''நீர் என்னை சாஷ்டாங்கம் செய்யவில்லையே'' என்றார். அப்போது ஸ்தபதியார் சுவாமிகளை நோக்கி ''நாங்கள் எங்களுடைய குருமார்களைத்தவிர வேறு யாருக்கும் சாஸ்டாங்கம் செய்வதில்லை'' என்றார். உடனே சுவாமிகள் ''நான் ஜெகத்குரு அல்லவா?'' என்று வாதித்தார் அதற்குப் பதில் சொன்ன ஸ்தபதியார் ''நீங்கள் ஜெகத்குருவல்ல, குருநாம் குரு விஸ்வகர்மா ஜெகத்குரு ஸபிதா பிரஜானும் சிருஷ்ட்யா புவனம்?'' என்ற வேதவாக்கியத்தை மொழிந்தார் ''புவனங்களையும் ஜீவராசிகளையும் சிருஷ்டிப்பவனே ஜெகத்குரு அவனே விஸ்வகர்மாவான விராட் புருஷன் எனவே அவனுடைய சந்ததியார்களான விஸ்வபிராம்மணர்களே லோக குரு ஆவார்கள் என்ற கருத்துப்படக் கூறினார். அதற்குப் பின்னர் மந்தஹாசம் செய்தபடி ஸ்தபதியாருக்குப் பிரஸாதம் கொடுத்தனுப்பினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர் அறிக்கை – 2

கடந்த 19 - 6 - 88ல் இலங்கை விஸ்வகர்ம சங்கத்தின் 69வது வருடாந்தகூட்டம் நடைபெற்றது நடப்பு ஆண்டுக்கான உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். 27 – 6 – 88ல் உத்தியோகத்தர் குழு கூட்டம் நடைபெற்றது. அச்சமயம் 9 செயற்குழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். அனைவரின் பெயர் விபர பட்டியல் முன் அட்டையின் உட்புறம் தரப்பட்டுள்ளது.

1 – 7 - 88 அன்று மோடி மண்டபத்தில் மதுரை ரவீந்திர சாஸ்திரிகளின் "நவக்கிரகங்களின் சிறப்பும், மனித தோஷங்களும், துர்க்கையின் அருளும்" என்ற தலைப்பிலான சிறப்பு சொற்பொழிவு சங்கத்தின் ஆதரவில் இடம்பெற்றது.

7 - 7 - 88 அன்று முதலாவது செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அன்றைய தினம் இரு உபகுழுக்கள் நியமிக்கப்பட்டன. அங்கத்துவ விண்ணப்பங்களைப் பரிசீலிக்க

திருவாளர்கள் S. தங்கம் ஆச்சாரி
T. கிருஷ்ணநாதன்
A கணபதி ஆச்சாரி ஆகியோர் அடங்கிய உபகுழுவும்

பஜனை நிகழ்ச்சிகளை நடத்த

திருவாளர்கள் S. கதிர்வேல் ஆச்சாரி
S. சுப்பையா
T. நமசிவாயம்
ஆகியோர் அடங்கிய உபகுழுவும் நியமிக்கப்பட்டன.

சங்க நிகழ்ச்சிகளை பத்திரிகை மூலம் விளம்பரப்படுத்தும் பொறுப்புக்கு, திரு. M. கதிர்வேல் நியமிக்கப்பட்டார்.

மரண சடங்கு சம்பந்தமான உதவிகள் தேவைப்படுபவர்கள் செயலாளர் திரு. T. பாலசுப்பிரமணியம் அல்லது உதவி பொருளாளர் திரு. T. நமசிவாயம் ஆகியோரை தொடர்புகொள்ளலாம்.

## ◀ வேண்டுகோள் ▶

அங்கத்தினர்களே!

பல சிரமங்களுக்கு மத்தியிலும் நம் சமூகத்தவர்களின் நலன் கருதி, சங்க நிர்வாகம் பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். ஆனால் கடந்த இரு ஆண்டுகளில் சங்கத்தால் நடத்தப்பட்ட பல பொது நிகழ்ச்சிகளுக்கு அங்கத்தினர் பலர் ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கவில்லை. இது ஒரு பெரும் குறை. பஜனை நிகழ்ச்சிகளுக்குக்கூட அங்கத்தினர் வருவதில்லை. மாதத்தில் இரு மணிநேரம் ஒதுக்கி நிகழ்ச்சியில் கலந்துகொள்ள முன் வருவதில்லையே. தங்களால் கலந்துகொள்ள முடியாவிட்டால்கூட தங்கள் குடும்பத்தினர்களை அனுப்பிவைத்தால்கூட பஜனை சிறப்பாக அமையும்.

நாங்கள் பலமுறை தெரிவித்ததை மீண்டும் தெரிவிக்கிறோம். அதாவது, வேற்றுமை, ஏற்ற தாழ்வுகளை மறந்து, சமூகத்தின் மேல் அக்கறையுடன், சங்கத்துடன் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். உங்கள் குறைகளை எமக்கு தெரிவியுங்கள். தனிப்பட்ட முறையில், நன்மை தீமையான காரியங்களில் சங்கத்தினர் கலந்து கொள்ளவில்லை என்று கூறி சங்க வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கவேண்டாம் என்பது எமது தாழ்மையான கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க கட்டிடம் கட்டி முடிக்க ஒவ்வொருவரும் தங்களால் ஆன ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்குவீர்கள் என்று நம்புகிறோம்.

நன்றி

இங்ஙனம்
செயற்குழுவின் சார்பில்
**T. பாலசுப்பிரமணியம்**
(செயலாளர்)

# வாழ்க்கை

**வா**ழ்க்கை என்பது கணிதம் போன்றது நண்பர்களைக் கூட்டி, எதிரிகளைக் கழித்து, சந்தோஷத்தையும் துக்கத்தையும் பிரித்து, பெருக்குவதாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| வாழ்க்கை | ஒரு | சவால் | — | அதை சந்தி |
| ,, | ,, | புத்தகம் | — | அதை வாசி |
| ,, | ,, | போராட்டம் | — | அதை ஏற்றுக்கொள் |
| ,, | ,, | சோகக் கதை | — | அதை நினையாதே |
| ,, | ,, | கடமை | — | அதை நிறைவேற்று |
| ,, | | வாழ்த்து | — | அதை வாங்கிக்கொள் |
| ,, | என்பது | அன்பு | — | அதை நேசி |
| ,, | ,, | துயரம் | — | அதை மறந்துவிடு |
| ,, | ,, | விளையாட்டு | — | அதை விளையாடு |
| ,, | ஒரு | பாட்டு | — | அதை பாடு |
| ,, | ,, | உயிர் | — | அதை வாழ்ந்துவிடு |

## அஞ்சலி செலுத்துகிறோம்

சமீபத்தில் எமது சமூக பிரமுகர்கள் சிலர் இறைவனடி சேர்ந்துவிட்டனர். அவர்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி இறைவனை வேண்டிக்கொண்டு, அவர்கள் குடும்பத்தினருக்கு எம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

1. திரு. S. வள்ளிச்சாமி
2. திரு. S. ராதாகிருஷ்ணன்
3. திரு. K. சுப்பையா ஆச்சாரி
4. திரு. M. R, முத்துசாமி (இசையமைப்பாளர்)
5. திரு. R. சொக்கலிங்கம் ஆச்சாரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொண்டர் குழு

இருபத்திஐந்து (25) இளைஞர்களைக் கொண்ட தொண்டர் குழு ஒன்று நியமிக்க செயற்குழு தீர்மானித்துள்ளது. இக் குழுவில் சேர்ந்து சங்க வளர்ச்சியில் பங்களிக்கவும், ஒத்துழைப்பும் ஆதரவும் தர விரும்பும் ஆர்வமுள்ள இளைஞர்கள் இதன் கீழ் காணப்படும் படிவத்தை போன்று தயாரித்து, அல்லது இதனையே பூர்த்தி செய்து, எதிர்வரும் 30 – 9 – 88 க்கு முன்னதாக செயலாளர் 102, புதுச்செட்டித் தெரு, கொழும்பு 13 என்ற விலாசத்துக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

## விண்ணப்ப படிவம்

1. பெயர் : ..........................................................................

2. வீட்டு விலாசம் ..........................................................................

   ..........................................................................

   தொலைபேசி : ..................................

3. தொழில் ..................................

4. தொழிலக விலாசம் : ..........................................................................

   ..........................................................................

   தொலைபேசி : ..................................

5. சங்கத்தில் அங்கத்தவரா ? ஆம் / இல்லை

   அங்கத்துவ இலக்கம் : ..................................

6. விவாகமானவரா ? ஆம் / இல்லை

7. கல்வித் தகைமைகள் : ..................................

8. தந்தையார் பெயர் : ..................................

..................................

கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "செய்யும் தொழிலே தெய்வம்"

இன்றைய உலகில் மனித சமுதாயமானது பல்வேறுபட்ட இனம், மொழி, மதம், கலாச்சாரம் என்று தனக்கென ஒரு நாகரிகத்தை வளர்த்துக்கொண்டிருக்கிறது. இந்த நாகரிக வளர்ச்சி தளிர்விட்ட காலத்தே இருந்து அவரவர்கென பல்வேறு வகையான தொழில்களையும் பின்பற்றியே வந்திருக்கின்றனர். அதுவே அவரவர் குலத்தொழில்களாக நாளடைவில் மாறியிருக்கின்றன.

தற்போதைய மனித சமுதாயம் மேற்கொண்டிருக்கும் பல்வகைப்பட்ட தொழில்களின் ஆணிவேர், அதாவது அடிப்படை வளர்ச்சி அடைந்ததற்கு விஸ்வகுலத்தின் ஐந்து வகையான தொழில்களே பெரும்பங்கு வகிப்பதை காரணமாக நாம் கூறமுடியும்.

எவ்வாறு ஒரு மாநதியிலிருந்து பலதரப்பட்ட கிளை நதிகள் பிரிந்திருக்கமுடியுமோ, அதுபோன்று தான் விஸ்வகுலம் என்னும் மாபெரும் தொழில் தனின் இருந்து பிரிந்ததே ஏனைய தொழில்களாக இருக்கமுடியும் ஏர்முனைக்கொண்டு உழைக்கும் உழவன் சிறந்தவனாயினும், ஏர்முனை என்ற கலப்பையை உருவாக்கித்தந்த விஸ்வகுல தச்சன் அவனினும் சிறந்தவன் ஆவான் இவன் இல்லையென்றால் அவன் எப்படி அந்த நிலத்தை உழுது உணவை உற்பத்தி செய்யமுடியும்? அதுமட்டுமல்ல நாம் அணியும் ஆடையினை நெய்துதரும் நெசவாளி தேர்ந்தவனாயினும் அந்த நெசவுக்கருவியை உருவாக்கித் தந்த அந்த விஸ்வகுல தச்சன் சிறந்தவனில்லையா? செக்கை ஆட்டி தேங்காயிலிருந்து எண்ணெயைப் பிரித்தெடுப்பதற்கு செக்காகிய அப்பெரிய உரலை உருவாக்கித் தந்தவனும் விஸ்வகுல சிற்பிதான்.

இன்று தொழிற்சாலைகளில் பெருமளவில் உருவாக்கப்படும் உதிரிப்பாகங்களின் முதல் வார்ப்பு ஒரு விஸ்வகுலத்தவரால் உருவாக்கப்பட்டபின்பே, இயந்திரங்களின் உதவியுடன் அதன் உற்பத்தியைப் பெருக்கலாம். இவன் கைவண்ணம் கண்டபின்தான் எதனையும் தொழிற்சாலைகள் பயன்படுத்தலாம். அதுமட்டுமல்ல இவ்வுலக தொழிற்துறை மேலோங்குவதற்கான அடிப்படை ஆதாரம் விஸ்வகுலத்தவன் கைகளின் உழைப்பில்தான் அடங்கியுள்ளது. இந்தப் பெருமையின் பலன் விஸ்வகுலத் தொழிலை இந்த உலகிற்கு கற்றருளிய அந்த விராட் விஸ்வபிரம்மனுக்கே உரியதாகும்.

ஆனால் இன்று நாம் எந்த அளவிற்கு நமது பெருமைகளை உணராமல், நம் முன்னோர்கள் பின் பற்றிய நெறிமுறைகளையும் நற்பண்புகளையும் மறந்திருக்கின்றோம் என்பதை, நமது இருள்திரை நீக்கி சிந்தனை ஒளியை மனதில் பிரதிபலித்து எண்ணிபார்க்கவேண்டும்.

இன்று நமது விஸ்வகர்மாக்களை ஆச்சாரி என்ற எமது குலப்பெயரோடு அழைப்பதை நாம் அறியலாம். எனினும் அதை நாம் பெயரளவில் தான் வைத்திருக்கிறோம். என்பதையும் உணர்ந்து பார்க்கவேண்டும். ஆச்சாரி என்பதன் உட்பொருள் ஆச்சார்யமாகும், அதாவது ஆச்சார்யமான நற்பண்புகளையும் வேதநெறிகளையும் பின்பற்றுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நம்மிடம் அது எவ்வாறு படிப்படியாக மறைந்திருக்கிறது என்பதையும் எண்ண வேண்டும். பிராமண சமுதாயத்தினர் போன்று நாமும் ஆச்சார்யமான வேத அனுஷ்டானங்களையும் சடங்குகளையும் பின்பற்றிய காலம் அன்று இருந்தது. ஆனால் இன்று நற்பண்புகளையும் வேதமுறைகளையும் கடைபிடிக்காத காரணத்தால், காலதேவன் அனல் கரம் பட்டு, பெருமை நிலை குன்ற, நமது பெருமைகளை மற்றைய சமூகத்தவர் உணராத வகையில் இருக்கின்றோம். பூநூல் அணிவது நமது குலத்திற்கு உரிதான வேத அனுஷ்டான பழக்கமாகும். இந்த வழக்கம் இன்றும் ஒரு சிலரிடத்தே பின்பற்றப்படுவது நமக்கு சற்று உற்சாகத்தைத் தந்தாலும், நாம் எல்லோரும் ஒன்றுபட்டு நமது முன்னோர்கள் கடைபிடித்த வழக்கத்தை நாமும் பின்பற்றினால்தான். நமது பின்னோர்களும் அதன் வழி நடப்பார்கள். இல்லையெனில் நமது பின்னால் வரும் சந்ததியினருக்கு நமது வேத அனுஷ்டானங்களின் அரிச்சுவடு கூட கிடைக்காமல் போய்விடக்கூடும்.

எல்லாம் வல்ல அந்த இறைவனுக்கே ஆலயம் உருவாக்க நம்மை ஆணையிட்டிருக்கின்றான். விஸ்வபிரம்மன் அதுமட்டுமல்லாது அதனைக்கட்டி அதற்கு கும்பாபிஷேகம் வேத சடங்கின்படி செய்து இறைவனை முதன் முதலில் அர்சித்து வணங்கும் பாக்கியம் உடையவர் நம் இனத்தவர் இறைவன்தான் மனிதனை சிருஷ்டிக்கிறான். ஆனால் அந்த மனிதர்கள் வணங்க நாம்தான் இறைவனை சிருஷ்டிக்கின்றோம். யாருக்குமே அளிக்காத பெரும் பேற்றினை நமக்கு இறைவன் அளித்துள்ளது, நமது பெருமைக்கு உயர்வுதருகிறது.

நமது இந்து மதத்தில் உள்ள வேதத்தின் தத்துவங்கள் வெறும் பக்தி வாழ்க்கையை போதிக்கும் சம்பிரதாயங்கள் மட்டுமல்லாமல், மனிதன் உழைப்பாலும் உயர்ந்திட பல்வேறுபட்ட தொழில் நுட்பத்தையும் கலைகளையும்கூட கற்றுத்தரக்கூடியவை. நமக்கு முன் வாழ்ந்த ரிஷிகள் வேத அனுஷ்டானங்களையும் கலை நுணுக்கங்களையும் சமஸ்கிருத மொழியிலும் தமிழிலும் ஏனைய மொழிகளிலும் எழுதிவைத்திருக்கின்றனர். சிற்பசாஸ்திரம் கற்க விருப்பமுடைய விஸ்வகுலத்தினன் முதன் முதலில் சமஸ்கிருதம் கற்று உணர்ந்த பின்புதான் சிற்பசாஸ்திரத்தை முறையாக அறிய முடியும். இந்துவாக பிறந்த ஒவ்வொருவரும் சமஸ்கிருதம் அறிந்திருப்பது அவசியமானதாகும். அதைக் கற்றுணராமையினால்தான் நாம் இன்றைய விஞ்ஞான உலகிற்குத் தேவையான தொழிற் நுட்பங்களையும் கலைகளையும் அறியக்கூடிய வாய்ப்பை இழந்துவிட்டோம். அதனாலேயே முன்னோர்கள் அறிந்து வைத்திருந்த அறுபத்திநான்கு கலைகளில் எத்தனையோ அடிச்சுவடுகள் தெரியாமலே அஸ்தமித்துவிட்டன.

கலை என்று கூறுமிடத்தில் அது இன்றும் நிலைத்திருக்க விஸ்வகலைஞனவன் அன்று பெரும்பங்கு வகித்திருக்கின்றான். அன்று பண்டைய மன்னர்களின் ஆட்சியமைப்பு, வாழ்க்கை, அன்றைய மனிதன் அறிந்திருந்த கலைகளத்தனையையும் ஆலயங்களின் சிற்பங்களிலும் கலைநயத்துடன் வடிக்கப்பெற்றதாலேயும், செம்புதகடுகளில் குறிக்கப்பெற்றதாலுமே இன்று நமக்கு அறியமுடிக்கிறது இவையெல்லாம் அழியாமல், காலம் காலமாய் காத்துவந்த மன்னர்களுக்கும் அவற்றைத் தம் கலைநுட்பத்தால் அறியவைத்து, நாம் இன்றும் காணக்கூடியதாக அமைத்த விஸ்வகுல மக்களுக்கும். இந்த மண்ணுலக மக்கள் எல்லோரும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளார்கள். அதுமட்டுமல்லாது அந்தக் கலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொக்கிஷங்களைப் இன்றும் பாதுகாத்து வருவதாலேயே நாம் அதனைத் தெரிவிக்கமுடியும். கலை என்பது தெய்வத்திற்குச் சமமானது. ஆகையால்தான் இறைவனான நடராஜமூர்த்தியும் நடனரூபமாகவும், யோகநிலை உடையவராகவும் கலைநயத்துடன் பலவித கலைவடிவங்களுடன் நமக்கு காட்சியளிக்கிறார். இவ்வாறு இறைவனை சிலையாகச் செதுக்கும்போது இறைவனே அதில் மயங்கி நின்று அந்தச் சிலை உயிர்பெற்றதாக எத்தனையோ நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. அந்த அளவிற்கு விஸ்வ கலைஞனின் திறமையைக்கண்டு இறைவனே அதில் சஞ்சரிக்கின்றான். இறைவன் அளித்த அந்த கலைகளே மனிதனுக்கு இன்று தொழிலாக மாறிவிட்டது. ஆகவேதான் ''செய்யும் தொழிலே தெய்வம்'' என்ற ஒரு கருத்து நம் மனதில் ஏற்பட்டுவிட்டது.

இவ்வுலகில் சகல மக்களும் இனம், மொழி ஆகிய சமுதாய, நாகரிக சுவர்களை எழுப்பி தனித்தனியாக வாழ்ந்தாலும், செய்யும் குலத்தொழிலின் மூலம் அவர்களெல்லாம் ஒன்றாக இணைக்கப்படுகிறார்கள்.

இயேசுபிரான் இந்த உலகில் அவதரித்தபோது தச்சுத்தொழில் செய்யும் ஒருவருக்குத்தான் பாலகனாகப் பிறந்து, அவரும் அத்தொழிலையே மேற்கொண்டார். அவர் இனம், மொழியால் வேறுபட்டவராக இருப்பினும், போதித்த தர்மம், மேற்கொண்ட தொழில்களின் மூலம் நம்மோடு ஒன்றுபட்டு இருக்கின்றார்.

இந்தக் கருத்தின்மூலம் உலகில் வாழும் சகல இனமக்களும் வெவ்வேறு மொழி பேசினாலும், இனத்தால் வேறுபட்டாலும், செய்யும் தொழில்களினால் ஒன்றுபடும்போது அதனை மதமோ, வேறு எந்த சக்திகளாலோ பிரிக்க முடியாது. ஆகவே நாம் நமது முன்னோர்கள் காட்டிய பாதையில் இருந்து மாறாமல் அவர்கள் பின்பற்றிய பழக்கங்களையும் நற்பண்புகளையும் கடைபிடித்து விஸ்வகுலம் தழைத்து வளர்ச்சிபெற விஸ்வபிரம்மவின் அருள் கிடைக்க வந்தனை செய்வோமாக.

வாழ்க விஸ்வபிரம்மா ! வளர்க விஸ்வகுலம் !!

— நடராஜா மாரிமுத்து

---

## ஓர் வேண்டுகோள் !

நன்னெறி புகட்டும் பெரியோர்க்கும் நட்புரிமை கொண்ட தோழர்களுக்கும் நீங்கள் எழுதப்போகும் கருத்துக்களும், அறிவுரைகளும், தங்கள் சிந்தனை என்னும் குளத்திலே உயிர்தெழுந்த தாமரையாகவும், எனக்கு அறிவு என்னும் கிடைக்கப்பெற்ற அற்புத மலராகவும், உங்கள் சிந்தனை என்னும் குளத்திலே நீந்தி அற்புதமானதும் அழகானதுமான மலர்களைத் தர வேண்டுகிறேன் !

இப்படிக்கு

க. பிரேம் ஆனந்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சமாதானப்புரு பறக்கட்டும்!"

நாட்டின் கண்களே! ஓ சமாதானமே!
உன் கண்களை நாமே குருடாக்கி விட்டு
பார்வை இருந்தும் குருடர்களாக நாம்
வாழ்ந்து கொண்டிருக்கிறோம்!
உயிர்களின் ஜனனத்தின் மறுநிமிடம்
மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம்!
உதட்டிலே சமாதானத்தை ஒலித்துக்
கொண்டு தான் இருக்கின்றோம்
ஆம்! உயிர்களையெல்லாம் பலிகொடுத்துக்கொண்டு!

●

பிறந்தோம்! வளர்ந்தோம்! வாழ்கிறோம்!
ஆம்! உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லாமலேயே!
உணர்வுகளுக்கு தாலாட்டுப் பாடிக்கொண்டு
தட்டி எழுப்ப முடியுமா?
எம் உணர்வுகள் விழிக்கட்டும்!
உள்ளத்தில் உதயம் உண்டாகட்டும்!
ஒற்றுமை உயிருடன் கலக்கட்டும்!
சிறைபட்ட சமாதானப்புரு வெளியேறட்டும்!
எங்கும் அது சிறகடித்துப் பறக்கட்டும்!

- செல்வி ஆனந்தி கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யவன ஓவியன்

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சோழப் பேரரசின் மஹோன்னத காலம். சக்கரவர்த்தி ராஜராஜ சோழனின் ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தஞ்சை பெரிய கோவிலான பிரஹதீஸ்வரர் ஆலய நிர்மாண வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டிருக்கின்றன. ஒருநாள் மாமன்னன் ராஜராஜர் அரண்மனை சபாமண்டபத்தில் தமது மந்திரி பிரதானிகளுடன் ஏதோ ஒரு மந்திராலோசனை நடாத்திக்கொண்டிருந்தார். அப்பொழுது அரண்மனை துவாரபாலகன் அங்குவந்து மன்னரை வணங்கிவிட்டுச் சொன்னான்.

''மன்னவா! யவனதேசத்திலிருந்து வந்திருக்கும் ஓவியன் ஒருவன் தங்களைப் பேட்டி காண அனுமதிகோரி அரண்மனை ராஜவாசலில் காத்துக்கொண்டு நிற்கின்றான்'' என்றான். ''அவனை உடனே இங்கே அனுப்பிவை'' என்று அரசர் பணித்தார்.

சற்று நேரத்தில் அந்த ஓவியன் அரச சன்னிதானத்தில் வந்து பேரரசரை வணங்கிவிட்டுச் ''மன்னர் பெருமானே! யான் யவன நாட்டு ஓவியன். ஹிந்துஸ்தானத்திலுள்ள பல ராஜதானிகளுக்கும் சென்று அங்குள்ள பிரபல ஓவியர்களையெல்லாம் போட்டியில் வென்று அவர்களிடமிருந்து அடிமைச் சீட்டும் பெற்று வந்திருக்கிறேன் தங்கள் சோழநாட்டு ஓவியர்களையும் வென்று வாகைசூடி அவர்களிடமிருந்தும் அடிமைச்சீட்டுப் பெற்றுக் கொண்டு போவதற்காகவே இப்பொழுது இங்கு வந்துள்ளேன்''

அதுகேட்டு அங்கிருந்த வந்தியத்தேவர் சற்று கோபத்துடன் அவனைத் திரும்பிப் பார்த்தார். அவரைக் கையமர்த்திவிட்டு ஓவியனைப் பார்த்து மன்னர், ''நல்லது சோழநாட்டு ஓவியர்கள் எந்தப் போட்டிக்கும் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அதற்குமுன் உமது தகுதியை எமக்கு நிரூபித்துக்காட்டவேண்டும்'' என்றார்.

''அப்படியானால் நாளைக்காலை தங்கள் தலைநகரின் பொதுமண்டபத்தில் வந்து பார்க்கும்படி விண்ணப்பித்துக்கொள்கிறேன்'' என்று கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றுவிட்டான் அந்த யவனன்.

மறுநாள் முற்பகல் மந்திரி பிரதானிகளுடனும் அரச பரிவாரங்களுடனும் மன்னர் ஊருக்கு நடுநாயகமாக விளங்கிய பொது மண்டபத்திற்குச் சென்றார். அங்கே அந்த ஓவியன் மன்னரையும் மற்றவர்களையும் வரவேற்று வணங்கிவிட்டு மண்டபத்தின் மேடைக்கு அழைத்துச் சென்று அங்கு தொங்கிக்கொண்டிருந்த யவனத்திரைச் சேலையை நீக்கினான். என்ன விந்தை! மாமன்னர் ராஜராஜரும் மற்றுமுள்ளோரும் தாங்கள் ஒரு திராட்சைத் தோட்டத்தில் நிற்பதைப் போல் உணர்ந்தார்கள். மேடையில் மூன்று பக்கத்துச் சுவர்களிலும் வரையப் பெற்றிருந்த திராட்சைப்பழக் கொத்துக்களைப் பார்த்து அப்படியே பிரமித்துப்போய் நின்றார்கள். அந்தத் திராட்சைக் கொத்துக்கள் நிஜ திராட்சைப் பழங்களைப்போல் காட்சியளித்ததோடு, அவைகளைப் பார்த்த குருவிக்கூட்டங்கள், அணில்கள் முதலிய ஜந்துக்கள் அவைகளைக் கொத்திச் சாப்பிடக் காத்துக்கொண்டிருப்பதையும் கண்டார்கள்

''ரொம்பவும் அபாரம் ஓவியரே'' என்று அவரின் தோளைத்தட்டிக் கொடுத்து பாராட்டிய மன்னர் தனது கழுத்தில் அணிந்திருந்த நவரத்தின ஹாரத்தைக் கழற்றி அவனுக்கு அணிவித்தார். ''நல்லது நாளைக்காலை எமது அரண்மனைச் சபாமண்டபத்தில் சோழநாட்டு ஓவியர்கள் உங்களுடன் போட்டியிடத் தயாராக இருப்பார்கள்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் காலை அந்த யவன ஓவியன் தனக்கு அளிக்கப்பட்டிருந்த பல்லக்கில் அரண்மனை நோக்கிப் புறப்பட்டான். வழியில் நகர் பொதுமண்டபத்தை அண்மித்த போது அங்கு தான் வரைந்திருந்த திராட்சைச் சித்திரத்திற்குப் பக்கத்தில் பன்னிரண்டு வயதுடைய வேட்டுவச் சிறுவன் அம்பு தொடுத்த வில்லும் கையுமாக நின்றுகொண்டிருப்பதையும், அவனைக்கண்டு பயந்துபோன பறவைகள், திராட்சைக் கொத்துக்களை நெருங்க முடியாமல் தூரவிலகி நிற்பதையும் கண்டான். அக்காட்சியைக் கண்டு கோபமடைந்த யவன ஓவியன் பல்லக்கில் இருந்தபடியே. ''அடே பையா, அங்கே என்ன செய்துக் கொண்டிருக்கிறாய்? தூரே விலகிப் போ'' என்று கத்தினான். பையன் அசைந்தால்தானே. மேலும் ஆத்திரமடைந்த ஓவியன் பல்லக்கை விட்டிறங்கி அந்த வேட்டுவச் சிறுவனை நெறுங்கி தனது கைகளை ஓங்கிக்கொண்டு ''விலகிப்போகிறாயா இல்லையா?'' என்று சொல்லிக்கொண்டு அவனை அடிக்கப்போனான். ஏமார்ந்தான் அந்த யவனன் என்ன அதிசயம்! அங்கே நின்றது உண்மையான வேடுவச் சிறுவன் அல்ல. அது ஒரு ஓவியம் என்பதைக்கண்டு வியந்துபோய் பின் தனது பல்லக்கில் எறி அரசமாளிகை நோக்கி விரைந்தான்.

அரண்மனையில் அவனை ராஜராஜரும் சோழநாட்டு ஓவியர்களும் பிரதானிகளும் வரவேற்று இருக்கை தந்துவிட்டு. ''என்ன போட்டியை ஆரம்பிக்கலாமா?'' என்று அரசர் கேட்டார்.

''வேந்தே! நான் இப்பொழுது இங்கு வந்தது போட்டி நடாத்தவல்ல ஆனால்-மையமண்டபத்தில் எனது திராட்சை ஓவியத்துக்குப் பக்கத்தில் வில்லும் கையுமாக ஒரு வேடுவச் சிறுவனின் உருவத்தை வரைந்தாரே அந்தச் சோழ ஓவிய மேதைக்கு அடிமைப்பட்டயம் எழுதிக்கொடுத்துவிட்டுப்போகவே வந்தேன். எனது திராட்சை ஓவியத்தைப் பார்த்து பட்சிகளும் குருவிகளும் அணில்களுமே ஏமார்ந்தன. ஆனால் அவருடைய ஓவியத்தைக்கண்டு நானே அது ஒரு உண்மையான வேடுவச் சிறுவன்தான் வில்லும் கையுமாக அங்கே நின்றுகொண்டு எனது ஓவியத்தை அணுகவிடாமல் பறவைகளைந் தடுத்துக்கொண்டிருக்கிறான் என்று ஆந்திரமடைந்து அவனை அறைவதற்காக கையை ஓங்கிக்கொண்டுபோய் ஏமார்ந்தேன்'' என்று சொல்லிவிட்டு. ''எங்கே அவரை அழையுங்கள்'' என்று விநயத்தோடு கேட்டுக்கொண்டான்.

அப்பொழுது சபாமண்டபத்தில் பிரசன்னமாயிருந்த சோழ ஓவியர்கள் முதல் மந்திரி பிரதானிகளும், யார் அந்த ஓவியர், எங்களை அறியாமல் அந்த ஓவியர் எங்கே இருக்கிறார், என்று ஒருவரை ஒருவர் வியப்புடன் வினவிக்கொண்டார்கள்.

அப்பொழுது ராஜராஜர் அங்குள்ளர்களை நோக்கிச் சொன்னார். ''நேற்றுமாலை இந்த ஓவியப்போட்டி சம்பந்தமாக எனது தமக்கையார் குந்தவைப் பிராட்டியாருடன் ஆலோசிப்பதற்காக அவருடைய அந்தப்புரம் சென்றேன். அந்போது அவர்கள். ''பிரஹதீஸ்வரர் ஆலய வேலைகளில் ஈடுபட்டிருக்கும் ஓவியர்களின் நேரத்தை வீணாக்க வேண்டா''மென்றும், நீயே ஏதாவது செய்யேன்'' என்றும் பணித்தார்கள். எனவே கடந்த இரவு நகரமண்டபத்திற்குச் சென்று அந்தச் சிறுவனின் சித்திரத்தை வரைந்தேன். என்று சற்று சங்கோஜத்துடன் கூறினார். அதுகேட்டு வல்லவரையர், வந்தியதேவர் உட்பட அங்குநின்ற பிரதானிகள், சிற்ப ஓவிய விற்பன்னர்கள், யவன ஓவியன் ஈறாக எல்லோரும் எல்லையற்ற ஆச்சரியம் அடைந்தார்கள். கடைசியாக அந்த யவனநாட்டு ஓவியன் மாமன்னரின் பாதங்களில் விழுந்து வணங்கிவிட்டுச் சொன்னான்.

''வேந்தர் பெருமானே என்னை மன்னித்து விடுங்கள். இங்கு நான் போட்டிக்கு வந்ததே பெருந்தவறு எத்தனையோ அரசகாரியங்கள், நெருக்கடிகள், சாம்ராஜ்யம் சிக்கல்களில் எல்லாம் சதா மூழ்கிக்கிடக்கும் தாங்களோ இத்தனை வியத்தகு சிருஷ்டியைச் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்களேயானல், ஓவியத்தையே தங்கள் வாழ்க்கைத் தொழிலாகக்கொண்ட இந்த சோழநாட்டு ஓவியர்கள் எத்தகைய வித்தர்களாக இருப்பார்கள்? எனது அறியாமையாலும் மடமையாலும் நான் இங்கு வந்து சவால்விட்டதே பெரும் குற்றம். ஆகையால் தங்களுக்கு அடிமைச் சீட்டை எழுதித்தந்துவிட்டுச் செல்ல அனுமதியுங்கள்'' என்று சொல்லி விட்டுப் பணிவுடன் நின்ருன்.

சோழபூபதி அவனை நோக்கி, ''ஓவியரே, சிற்பம் முதலிய கலைகள் தெய்வீகக்கலைகள், இதில் அடிமை, ஆண்டானென்ற பேதமே இருக்கக்கூடாது ஆகவே இனிமேல் யாரிடமும் அடிமைச்சீட்டு என்ற பேச்சே இல்லாமல் உங்கள் பணிகளை மேன்மேலும் சிறப்புடன் செய்து புகழுடன் வாழ வேண்டுமென்று இறைவனைப் பிராத்திக்கிறேன்'' என்று சொல்லி விட்டு அக்கலைஞனுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்பி வைத்தார்.

சுபமஸ்து

- ''ராஜஹம்ஸ''

---

உ

சிவமயம்

ஸ்ரீ முத்து விநாயகர் துணை

ஸ்ரீ ராமஜெயம்

தாய் மூகாம்பிகா துணை

# மகிழ்வுடன் வாழ குரு வழி

உண்மையிலேயே நீ சந்தோஷமாக வாழ எண்ணுகிருயா? அதற்கு மிகச் சிறந்த ஒரே ஒரு வழிதான் உள்ளது. முன்னும் பின்னும் பார். நாலாபுறமும் சுற்றிப்பார். அதன் மூலம் உன்னைச் சுற்றியுள்ளவர்கள் அனைவரையும் அன்பால் நேசி, உன்னல் முடிந்தவரை உன் சக்திக்கு ஏற்ப அவர்களுக்கு உதவிகளைச் செய்து அவர்களை மகிழ்வுறச் செய். அப்படி அவர்கள் மகிழ்வுறும் வேளையில் அவர்களின் முகங்களில் காணப்படும் மனநிறைவும் சந்தோஷங்களையும், உன்னையும் வாழவைப்பதோடு உன் முகத்திலும் சந்தோஷங்களை நிரந்தரமாகத் தங்கிவிடும்.

எனவே மானுடரே இது ஒன்றே நீங்கள் நிரந்தரமாக மகிழ்வுடன் வாழ மிகச் சிறந்த வழியாகும். — சுவாமி விவேகானந்தர்

எனவே நாம் அனைவரும் எப்போதும் நம்மால் மற்றவர்களுக்கு எந்த வகையில் உதவ முடியும் என்று சிந்தனை செய்வோமாக அதன் மூலம் நம் வாழ்வும் சிறப்புற்று நிரந்தரமாக மகிழ்வுடன் வாழ்வோமாக.

மரணம் என்பது ஒவ்வோர் மனிதனுக்கும் நிச்சயிக்கப்பட்டதும், தேதி குறிப்பிடப்பட்டு அந்த வேளை அவனல் அறியமுடியாததுமான நிதர்சனமான உண்மை.

யம் யம் வாபி ஸ்மரந் த்யஜத்யந்தே கலேபரம்
தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவ பாவித

என்று உபநிஷத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதாவது, உயிர்பிரியும் அந்த இறுதி மூச்சில் ஆன்மா என்ன எண்ணி இறுதி மூச்சு விடுகிறதோ, அந்த எண்ணங்களுக்கு ஏற்றபடியே மீண்டும் பிறக்கிறது.

ஆகவே, பிறர்க்கு உதவும் உன் சிந்தனை உன் இறுதிமூச்சு இருக்கும்வரை உள்ளதாக வாழ்வினை அமைத்துக்கொள். இது இம்மையில் மாத்திரமின்றி மறுமையிலும் கூட உன்னை மகிழ்வுடன் வாழ உறுதுணை புரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— இரா. மகாதேவா பத்தர் சண்முகநாதன்

**ஸ்ரீ முத்துமீனாட்சி ஜுவல்லரி**
152B, செட்டியார் தெரு,
கொழும்பு 11.
தொலைபேசி: 33164 / 29104

இணை நிர்வனங்கள்
செல்வன் ட்ராவல்ஸ் & டுவர்ஸ்
திருமதி A. அழகுராசா
(அடகு வியாபாரம்)

**சுஜாதா ஜுவலர்ஸ்**
109, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

**கார்த்தி ஜுவலர்ஸ்**
46, கன்னாரத் தெரு,
கொழும்பு 13.
தொலைபேசி: 541067

**சக்தி ஜுவலர்ஸ்**
85, A. G. ஹின்னிஹப்புகாமி மாவத்தை,
கொழும்பு 13.
தொலைபேசி : 34298

**K. தங்கையா ஆச்சாரி அன் சன்ஸ்**
19, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு 13.
தொலைபேசி : 35124

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகம்

- ரிஷி -

சில நாட்களுக்குமுன் என் மனதில் ஒரு சந்தேகம் உதித்தது இந்த சந்தேகத்தை எவ்வகையில் நிவ்ருத்தி பண்ணிக்கொள்வது என்று தவியாய் தவித்தேன். காரியாலத்திற்கு மூன்று தினங்கள் லீவு எழுதிக்கொடுத்துவிட்டு, வீட்டு அறைக்குள்ளேயே இருந்து யோசித்தேன். இரண்டு தினங்கள் மண்டையைப்போட்டு உருட்டி எடுத்தும் உருப்படியான ஒரு முடிவுக்கும் வர இயலாமல் போயிற்று. ஆக்வே மூன்றுவது நாள் எனது ஆத்ம நண்பன் பத்மனுபனைக் கண்டு கலந்து ஆலோசிப்போமென்று வீட்டைவிட்டு வெளியே கிளம்பினேன். அவன் வீட்டில் இல்லாததை அறிந்து ஏமாற்றத்துடன் திரும்பினேன். அடுத்த வீட்டு ஆறுமுகத்திடமாவது ஆலோசனை கேட்போமென்று நினைத்தேன். பிறகு வீட்டிற்கு வந்து திரும்பவும் அறைக்குள் புகுந்து நாட்காலியில் முடங்கினேன். நான் படும் அவஸ்தையை நினைத்து எனக்கே சகித்துக்கொள்ள முடியாமல் கூரை முகட்டை முறைத்துப் பார்த்தேன்.

இதற்கு முன்னும் பல சந்தர்ப்பங்களில் அந்த கூரைமுகடு பல அற்புதமான யோசனைகளைத் தந்து உதவி இருக்கிறது. கையில் பணமில்லாமல் தவிக்கும் தருவாயில் யாரிடம் போய் முட்டினுல் கடன் வாங்கலாம்; அடுத்தவீட்டு ஆறுமுகத்தின் மனைவியுடன் புட்வை செலக்ஷனுக்கு என் மனைவி சங்குவை போகாமல் தடுப்பதற்கு சுலுவான வழி என்ன; டிபனுக்கு பொறிவிழாங்காய் செய்யும் சங்குவின் தீர்மானத்தை மாற்றுவதற்கு எது உபாயம்; என்பது போன்ற தர்மசங்கடமான வேளைகளிலெல்லாம் அந்தக் கூரை முகடு யோசனை தத்து உதவித்தான் இருக்கிறது. எத்தனைக் குரூரமாக அந்தக் கூரை முகட்டைப் பார்த்து முறைக்கிருேமோ அத்தனை சடுதியாக அது ஆலோசனை வழங்கிவிடும். அது என்னவோ அதன் வழக்கம் அப்படி அதனுல் இந்தத் தடவை எத்தனை வக்ரமாக் முகத்தை வைத்துக்கொள்ள முடியுமோ அத்தனை வக்ரமாக எனது முகத்தை வைத்துக் கொண்டு அந்தக் கூரைமுகட்டை முறைத்துப்பார்த்தேன். கைமேல் பலன் சடுதியில் நல்ல யோசனையை வழங்கியது அந்தக் கூரை முகடு அந்தக்கணமே செயலில் இறங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனதில் எழுந்த சந்தேகம் வேறு ஒன்றுமில்லை. சில தினங்களாகவே எனக்கு சங்குவின் கேள்விப்புலன் கெட்டுவிட்டதாக ஒரு சந்தேகம் அவ்வளவேதான் ''சங்கு'' என்று நான் அவளை அழைத்த போதெல்லாம் அவளுடைய காதில் அந்த அழைப்பு சரியாக விழுந்ததாக என் மனதில் படவில்லை. இந்த சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள அவளிடமே திடீர் திடீரென்று எதையாவது கேட்டுவைத்து அவள் மனமுடைந்து வேதனை படவேண்டாமே என்பதற்காகத்தான் மூன்று தினங்களாக என் மண்டையைப் போட்டு உடைத்துக்கொண்டேன். இறுதியாக எனது சந்தேகத்தைப் போக்கிக்கொள்ள நாசுக்கான வழியை அந்தக் கூரைமுகடு எனக்கு தந்து உதவியது அதன்படியே செயலில் இறங்கினேன்.

அறையை விட்டு வெளியே வந்தேன். எனது நடவடிக்கைகளைச் சிறிது சந்தேகத்தோடு கண்காணித்துக்கொண்டிருந்த என் மனைவி சங்கு கீரை கடைந்த மத்தும் கையுமாக அடுக்களை வாயிலில் நின்றாள். அவள் நின்ற இடத்திலிருந்து முப்பதடி தூரம் சென்று அங்கு நின்றபடி, ''சங்கு'' என்றழைத்தேன். பதிலே இல்லை, எனது மனம் சோர்ந்து போயிற்று பின் பதினைந்தடி நெருங்கினேன்.

''சங்கு, நான் கூப்பிடுகிறது கேட்கிறதா?'' என சப்தமிட்டுப் பார்த்தேன். அப்போதும் பதிலில்லை. சரி சங்குவிற்கு காது மந்தமாகிவிட்டது என்பது உறுதியாயிற்று. எனது சந்தேகம் சரியானதே எனக்கண்டேன். மீண்டும் அவளை நெருங்கினேன். மூன்றடி தூரத்தில் நின்றுகொண்டு. ''என்னடி சங்கு, நான் கூப்பிட்டது உனக்கு கேட்காமல் போயிற்று?'' என இரக்கத்துடன் வினவினேன். அவளுடைய முகம் கடுகடுவென மாறியது.

''நாசமாய் போச்சு உங்கள் காதுக்கு என்ன ஆச்சு? மூன்று தரம் ''என்ன, என் கூப்பிடுறீங்க?'' என்று இரைந்தேனே உங்கள் காது இப்படி மந்தமாய் போச்சே, நான் கொஞ்சநாளாக சந்தேகப்பட்டது சரியாய்தான் போயிற்று சொல்கிறேனென்று கோபிக்காதீர்கள். காது ஸ்பெஷலிஸ்ட் கர்ணம்ருதத்தைப் போய் பாருங்கள் ''என்று கண்டிப்பாக உத்தரவிட்டாள்.

நான் அறைக்குள் சென்று நாட்காலியில் முடங்கினேன் அந்த கூரைமுகட்டை பரிதாபமாக முறைத்தேன்.

---

## ½ டிக்கட்டுகளுக்கு மட்டும்

1. கடிகாரத்துக்கு வெட்கம் என்று எப்படித் தெரியும்?
2. சல்லடையில் எப்படி தண்ணீர் கொண்டு போகலாம்?
3. எதற்கு பற்களுண்டு, ஆனால் கடிக்காது?
4. எப்படி சட்டை பாக்கட் காலியாகவும், அதே சமயம் ஏதோவும் இருக்கமுடியும்?
5. குன்றுக்கும் குலிசைக்கும் என்ன வித்தியாசம்?
6. பகலில் வீடெல்லாம் திரிந்து, இரவில் மூலையில் நிற்பது என்ன?
7. ஓடும் - கால்களில்லை; வாயுண்டு - வயிறில்லை, எது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(விடைகளை வேறு பக்கம் பார்க்கவும்.)

# 69ம் ஆண்டு பொதுக்கூட்ட அறிக்கை

நாளது விபவ வருடம் ஆனி மாதம் 5ம் நாள் (19-6-88) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் இலங்கை விஸ்வகர்ம சங்கத்தின் 69வது ஆண்டு பொதுக்கூட்டம் தலைவர் திரு. S. A. தியாகராஜா அவர்களது தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரும் கௌரவ அங்கத்தினருமான திரு. C. N. ராமசாமி ஆச்சாரி அவர்கள் தேவாரம் பாடி கூட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.

தலைவரின் வரவேற்புரையை தொடர்ந்து, செயலாளர் ஆண்டறிக்கையை வாசித்தார். அறிக்கை சரியென திரு S. ராமசந்திரன் முன்மொழிய, திரு. S. ஹரிரட்ணு வழிமொழிந்தார். இதனைத் தொடர்ந்து 68ம் ஆண்டு செயற்குழு கலைக்கப்படுவதாகவும், தற்காலிக தலைவராக திரு. C. N. ராமசாமி ஆச்சாரி அவர்களை பதவி ஏற்கும்படி தலைவர் கேட்டுக்கொண்டார்.

தற்காலிக தலைவர் அவர்கள் தமதுரையில் நடப்பு ஆண்டுக்கான தலைவர் ஒருவரை தெரிவு செய்யும்படி சபையோரைக் கேட்டுக்கொண்டார் திரு. S. A. தியாகராஜா அவர்களே மீண்டும் போட்டியின்றி தெரிவானார். அடுத்து உபதலைவராக திரு. S. சிவானந்தன், செயலாளர், திரு. T. பாலசுப்பிரமணியம், உதவி செயலாளர் திரு. N. சாந்திகுமார், பொருளாளராக திரு. N. விவேகானந்தன், உதவி பொருளாளராக திரு. T. நமசிவாயம், வாசிகசாலை அதிபராக திரு S. ஈஸ்வரமூர்த்தி, கட்டிட நிர்வாகஸ்த்தராக திரு. S. தங்கம் ஆச்சாரி, பத்திரிகை ஆசிரியராக திருமதி. M. தியாகராஜா வும் தெரிவானார்கள்.

தலைவர் தமது பின்னுரையில் இன்று தெரிவு செய்யப்பட்ட உத்தியோகஸ்தர்கள் கூடி செயற்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வார்கள் என்று கூறினார்.

மேலும் தெரிவுசெய்யப்பட்ட 9 உறுப்பினர்களின் பதவி காலம் தொடர்ந்து 3 வருடங்களாக இருக்கக்கூடியதாக பிரமாணத்தில் மாற்றம் கொண்டுவர சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, சமூகமளித்திருந்த 54 பேரில் 42 பேர் ஆதரவாக வாக்களித்து, பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சபையோர் குறிப்பில் திரு. T. கிருஷ்ணநாதன் மட்டும் சில கருத்துக்களைச் சொன்னார். அவர் தனது உரையில், நகை தொழில் சம்பந்தமான தொழிற் நுட்பங்களை வெளிநாட்டிலிருந்து நம்மவர்கள் தெரிந்துகொள்ளவும், அறிந்துகொள்ளவும் வாய்ப்பினை ஏற்படுத்தி தரும்படி தலைவர், உபதலைவர் ஆகியோரை கேட்டுக்கொண்டதுடன், கூட்டத்தில் சிறப்பு பிரதிநிதிகளாக கலந்துகொண்ட மதுரை ராமசாமி ஆச்சாரி லோகநாதன், நாகர்கோவில் சுப்பையா ஆச்சாரி நாகராஜன் அவர்களிடமும் நம் சங்க கட்டிட நிதிக்கு தமிழ்நாட்டிலிருந்தும் நிதி சேகரித்து தரும்படி கேட்டுக்கொண்டார்.

கொழும்பு ஜிந்துப்பிட்டித் தெரு திரு. S. சுப்பையா அவர்கள் கட்டிட நிதிக்கு ரூபா 10,000/- தருவதாக வாக்களித்தார்.

சிற்றுண்டி, குளிர்பானம் வழங்கப்பட்டு செயலாளரின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவெய்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For your complimentary articles for 1989
Calenders, Diaries and Plastic items

**RAJANI PRINTERS**
E. G, 2 Central Road,
Colombo 12.

Tel. 545880

---

**பழமுத்து முத்துக்கருப்பன் செட்டியார் நகைமாளிகை**

36, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

தொலைபேசி
28478-25820

---

**நித்தியகல்யாணி ஜுவலர்ஸ்**

40, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

தொலைபேசி
21617/22014

---

**பட்டக்கண்ணு சுப்பையா ஆச்சாரி அன் சன்ஸ்**

102, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு 13.

தொலைபேசி:
22304/23818

---

**சுபானி ஜுவல்ஸ்**

96, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவரத்தினம்

நவரத்தினம் என்பது சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது, என்ற 9 தேவர்களைக் குறிப்பதாகும். இவர்களுக்கு சூரியன் அதிபதி. இவர்கள் ஒவ்வொருவர் திசைக்கும் ஒரு ரத்தினம் விசேஷமாகும் திசை என்பது ஒவ்வொருவர் பிறந்த நட்சத்திரத்தைக் கொண்டு அறியலாம். பட்டியல் வருமாறு.

| நட்சத்திரம் | திசை | ரத்தினம் | |
|---|---|---|---|
| கிருத்திகை, உத்திரம், உத்திராடம் | — சூரிய திசை | — கெம்பு | (Ruby) |
| ரோகிணி, அஸ்தம், திருவோணம் | — சந்திர திசை | — முத்து | (Pearl) |
| மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் | — அங்காரக திசை | — பவளம் | (Coral) |
| திருவாதிரை, சுவாதி, சதயம் | — ராகு திசை | — கோமேதகம் | (Garnet) |
| புனர்பூசம், விசாகம், பூரட்டாதி | — குரு திசை | — புஷ்பராகம் | (Topaz) |
| பூசம், அனுஷம், உத்திரட்டாதி | — சனி திசை | — நீலம் | (Sapphire) |
| ஆயில்யம், கேட்டை, ரேவதி | — புதன் திசை | — பச்சை | (Emerald) |
| அசுவிணி, மகம், மூலம் | — கேது திசை | — வைடூரியம் | (Catseye) |
| பரணி, பூரம், பூராடம் | — சுக்கிர திசை | — வைரம் | (Diamond) |

9 திசைக்கும் 9 ரத்தினம் அணியலாம். அல்லது 9 கிரகத்துக்கும் 9 ரத்தினம் ஒரே மோதிரத்தில் அணிந்து கொண்டாலும் நல்லது. இதற்கு நவரத்தின மோதிரமென்பர். நவரத்தின மோதிரம் அணிந்தால், காலையில் ஸ்நானம் செய்தபின் பகவானைத் தொழுது மோதிரத்தை விரலில் அணியவும். மாலையில் அதை தனிப்பெட்டியில் வைக்கவேண்டும். அப்பெட்டியில் புஷ்பம் போட்டு வைக்கவும். அந்த மோதிரத்திற்கே பூஜையும் செய்யலாம். 9 கிரகங்களையும் வணங்குவதாக பொருள். மேற்படி மோதிரத்தைப் பூஜையில் வைத்து கீழ்கண்ட மந்திரத்தை 9 தடவை சொன்னால் மிகவும் நல்லது.

ஆதித்யாய ஸோமாய மங்களாய
புதாயச குருசுக்ர சனிப்யஸ்ச
ராஹவே கேதவே நம :

மேற்படி மோதிரத்தை பகவான் பாதத்தில் வைத்து அர்ச்சனை செய்யலாம். 9 திசை நடக்கும் போதும் அந்த கிரகத்துக்கு புஷ்பம் இட்டு அர்ச்சனை செய்யவும். 9 பேருக்கு அன்னதானமும் செய்யலாம்.

---

## 1/2 டிக்கட்டுகளுக்கு மட்டும் - விடைகள்

1. முகத்தின் முன்பாக இரு கைகளையும் வைத்துக்கொள்வதால்
2. ஐஸ்பெட்டியில் வைத்து தண்ணீரை ஐஸாக்கி கொண்டு போகலாம்.
3. சீப்பு
4. ஓட்டை இருக்கும்
5. குன்று மேலே போகும்; குலிசை கீழே போகும்.
6. துடைப்பம்
7. ஆறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஸ்வகர்மப் பிராமணர்களின் சக்தி வழிபாடு

விஸ்வபிராமணர்களின் காளி தேவியையே குலதெய்வமாக வழிபட்டு வருகின்றனர் ஆதி விஸ்வகர்ம ரிஷிகட்கு பற்பல சக்திகள் மனைவிகளானார்கள் என்றும் அவர்களின் வழியே விஸ்வபிராமண சந்ததி உண்டானது என்பதும் வரலாறு படைப்பு அல்லது சிருஷ்டி தொழிலுக்கு பூர்வ ரிஷியாதியோர் சக்திகளை தாங்கள் மணந்து அந்த சக்திகளை தம்முள் ஐக்கியமாக்கி அதன் காரணமாக சிருஷ்டிகளை எவ்வாறு லோகோபகாரமாக செய்தனரோ அதன்படியே விஸ்வபிராமணர் தமது பூர்வ தாயாகிய சக்தியின் முதன்மை பெற்ற ''ஸ்ரீ காளிதேவி யை'' ஆதி தேவதையாகக் கொண்டு அடிபணிந்து தங்கள் பணிகளைச் செய்தனர்.

விஸ்வபிராமணர்கள் காளிதேவியை தங்கள் குலதெய்வமாக கொண்டதற்குப் பல கதைகளை உதாரணமாகக் கூறுவர். அவற்றில் விஸ்வகர்ம புராணத்தில் உள்ள கதையின்படி ''முன்னொரு காலத்தில் சிவபிரானும் விஸ்வகர்மாவும் தங்களுள் யார் பெரியவர் என்ற வாக்குவாதத்தில் ஒருவரை ஒருவர் சபித்துக் கொண்டனர். இதன் காரணமாக உலகம் ஸ்தம்பித்து மிகுந்த பல கஷ்டங்களுக்கு உள்ளாயிற்று இதனால் இருவருக்கும் பொதுவாகவுள்ள சக்திகள் திரண்டு காளி உருவமாக அங்கே பிரசன்னமாகி இருவரையும் சமாதானப்படுத்தி, விஸ்வகர்மாவை நோக்கி, சிவன் உங்கள் குலத்தை சபித்தது நியாயமன்று. உங்கள் வகுப்பார் தமது பஞ்சகிருத்தியங்களால் உலகிற்கு உபகாரம் செய்வதால், நான் அவர்களுக்கு அச்சகத்தியைக் கொடுத்து அவர்களின் ஆதிதேவதையாகி, என்னை வணங்குவோரை இரட்சிக்கின்றேன் எனக் கூறினாள். இதனைக்கேட்டு திருப்தியடைந்த விஸ்வபிராமணர் தமது குலதெய்வமாக காளிதேவியை ஏற்றுக்கொள்வதாக வாக்குத் தானம் செய்து வழிபட்டுவருகின்றனர்'' என கூறப்பட்டுள்ளது.

இதன்படியே அன்றுமுதல் இன்றுவரை காளிதேவியை குலதெய்வமாக வணங்கி நன்மை அடைந்துள்ளனர். ஸ்ரீகாளி என்பவள் ஆதிசக்தியின் முதல் அவதாரமானவள். புராணங்களில் கூறியுள்ளபடியே நீ சக்கரத்தை உபயோகிப்பதன் மூலம் சகல தேவைதைகளின் உபாஸனையும் அதில் அடங்கியுள்ளது, உலகில் உள்ள சகல சக்திகளின் பூஜையும் லலிதா பூஜையில் கலந்திருக்கின்றது. இதன் காரணமாகவே நவராத்திரியில் லலிதா பூஜையில் கலந்திருக்கின்றது. இதன் காரணமாகவே நவராத்திரியில் லலிதா ஸகஸ்ரநாமத்தைச் சொல்லி ஸ்ரீ லலிதாவை பூஜிப்பது வழக்கம். சகல சக்திகளின் தெய்வமென அவளைக் கொண்டாடினர்.

இன்றும் விஸ்வகர்ம பிராமணர்கள் கையாண்டு வரும் லலிதா பூஜை, ஆயுத பூஜை விஸ்வகர்ம பூஜை, சரஸ்வதி பூஜை, என ஒவ்வொன்றும் சைவ ஆகமங்களின் விதிப்படியே நடைபெற்று வருகின்றது.

செல்வி. ந. கந்தசாமி

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித எண்ணங்கள்

- செல்வி அம்பிகா கதிர்வேல் ஆச்சாரி -

இன்று உலகிலுள்ள எல்லா முற்போக்கு நாடுகளிலும் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த வேண்டுமென்ற கூக்குரல் கேட்கிறது சமூகம், அரசியல், பொருளாதாரம் சமயம், இவற்றில் எக்கோணத்திலிருந்து பார்த்தாலும் அமைதியான வாழ்க்கை முறையின் ஒரு முக்கிய அம்சம் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதாகும் என்பது தெளிவாக விளங்குகிறது.

தினம் தினம் துன்பங்களை அனுபவிப்பவனே மனிதனுவான், அவன் தன் இன்ப துன்பங்களை உண்டு பண்ணவும் நிலை நிறுத்தவும் செய்கிறுன். அவற்றுக்கெல்லாம் முதல் காரணம் அவனுடைய எண்ணமே. இதற்கு மூல காரணம் செயல் ஆகும். அவனுடைய செயல்களின் மூலமே எண்ணங்களை அறிய முடியும்.

ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கையை எண்ணங்களாலேயே கொண்டு போகிறுன். அந்த எண்ணங்ககளுக்கமைய மற்றவர்களால் இன்பத் துன்பங்களை அவனுக்கு ஊட்டப் படுவதில்லை. ஒழுக்கக் கேடான எண்ணங்களை அவன் மாற்றியமைத்துத் தனக்கு நல் வாழ்க்கையை பெற விரும்புபவனுகை இருந்தால், தீய எண்ணங்களை மாற்றியமைக்க வேண்டும். அப்போதுதான் இன்பகரமான வாழ்க்கையை அவன் அடைய முடியும்.

ஒருவன் தன்னுடைய நலனுக்காக மற்றவர்களது மனதை அறியாமல், புரியாமல் செயல்படுவானுயின் அவனுல் என்றுமே மகிழ்ச்சியாக வாழ்ந்துவிட முடியாது. இதனுலேயே தன்னுடைய இயல்புகளையும் ஒழுக்கங்களையும் செயல்களையும், எண்ணக் கருக்களையும் திருத்தியமைக்க வேண்டும். உதாரணமாக சில மனிதரைப் பார்த்தால் அவர்களுடைய வாழ்க்கை அவ்வளவு சீராக, அதாவது அழகாகவும் அற்புதமாகவும் பெருமைக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கின்றது இதனுலேயே மனிதன் மனதை ஒருநிலைப்படுத்தி எண்ணங்களை ஒழுங்கு படுத்த வேண்டும். இதுவே நல்வாழ்க்கைக்கு காரணமாகும்.

அதே வேளையில் அற்ப உள்ளமும் ஆணவமும் கர்வம் பிடித்தவனுகவும் குறுகிய மனப்பான்மை உள்ளவனுகவும் இருக்கிறுன். இவற்றுக்கெல்லாம் காரணம் எண்ணம், அவர்களுடைய செயல்! ஆகவே ஒவ்வொரு மனிதனும் உயர்ந்தவனுகவும் இருக்கலாம். தாழ்ந்தவனுகவும் இருக்கலாம். அவன் தன்னுடைய எண்ணங்களை உயர்த்தி தன்னையும் உயர்வடையச் செய்து உலகில் முழு மனிதனுகத் திகழலாம்.

மனித சமுதாயமே வாழ்க! வளர்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நல்மனமே ஒரு கோயில்"

**- கந்தசாமி பிரேம் ஆனந்த் -**

இவ்வுலகில் மனிதனாய் பிறந்த ஒவ்வொருவரும் இறை உணர்வு என்ற ஜோதியை மனதில் ஏற்றினால்தான் இப்பிறப்பிலேயே புண்ணியம் என்ற பாதையின் மூலம் இறைவனின் திருப்பதங்களை அடையமுடியும். அன்பு அதற்கு ஓர் வழிகாட்டியாகும். மனிதன் குணத்தாலும் கொள்கையினாலும் வெவ்வேறு பாதைகளை வகுத்திருக்கிறான். அவற்றில் சிலருக்கு சுயநல அன்பும், ஒரு சிலருக்கு பரஸ்பர அன்பும், வேறு சிலருக்கு தன்னலமற்ற அன்பும் அவர்களின் பிறவி குணங்களாக இருக்கின்றன.

சுயநல அன்புள்ளவன் தன்னிலையைமட்டும்தான் உயர்த்த விரும்புகின்றான் பரஸ்பர அன்புள்ளவன் தன்னிலைப்போன்று பிறநிலையும் உயர எண்ணுகின்றான். ஆனால் தன்னலமற்றவன் பிறர் உயரவேண்டும் என்று நினைத்து தன்னலம் கருதாமல் உதவும் தியாகி ஆகிறான்.

நல்லோர் மனமே இறைவன் வாழும் இல்லமாக இருக்கிறது. அதை உணர்த்தும் வகையில், நமது இதிகாசமான இராமாயணத்தில் இறைவனே மனிதனாக அவதரித்து, மனிதன் இவ்வாறுதான் வாழவேண்டும் என்ற நெறிமுறைகளை அறிவுறுத்தி தர்மத்தின் சக்திகளை என்றும் இவ்வுலகத்தில் நிலைத்து இருக்கும் என்று வாழ்ந்து காட்டியிருக்கிறார்.

மனிதன் வெவ்வேறு சிந்தனையில் தன்னை இயக்கிக்கொண்டிருக்கிறான். ஆகவே தான் இறைவனும் வெவ்வேறு வடிவங்களில் காட்சி தருகிறான்.

இரவில் வானத்தில் பல நட்சத்திரங்களைக் காண்கின்றோம். ஆனால் காலையில் காண்பதில்லை. அதனால் வானில் நட்சத்திரங்கள் இல்லை என்று சொல்லிவிடமுடியாது. ஏனெனில் நீ அஞ்ஞான நிலையிலிருந்து மெய்ஞான நிலைக்கு உன் எண்ணங்களை மாற்றினால்தான் அவன் பெயரொலியே உணரலாம்.

அதுமட்டுமல்ல பனிக்கட்டி, நீர் இவ்விரண்டையும் போன்று நீர் பனிக்கட்டியாக உறையும்போது அதற்கு ஓர் உருவம் அமைக்கின்றான் அதே பனிக்கட்டி நீராக உருகும் போது உருவம் மறைகிறது. அதைப்போலத்தான் உண்மை பக்தனுக்கு உருவம் உடையவனாகவும் மற்றவர்க்கு உருவமற்றவனாகவும் விளங்குகிறான்.

பிறரிடம் உள்ள பண்புகளை நல்லன, தீயன என்று அலசி ஆராய்வதில் தன் காலத்தைக் கழிப்பவன், வீணே தன் காலத்தைக் கழிப்பவனாகின்றான். அந்த பயனற்ற ஆராய்ச்சியில் அவன் மனமும், காலமும் வீணாக கழிகின்றன. உள்ளம் எந்த நிலையில் இருந்தால் இறைவனைக் காணமுடியும்? தூய்மையான, சாந்தமான நிலையில் இருந்தால் தான் கைகூடும்.

பொன்னையே உயிர் என மதித்து, அதனை நாடும் ஓர் உலோபியைபோல் உன் எண்ணமும் சதா இறைவனை நினைந்து வாழவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விஸ்வஜோதி" குறுக்கெழுத்துப் போட்டி

இலக்கம் 2.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வி | 2 டி | 3 வெ | 4 ள் | 5 ளி | ■ |
| 7 நா | 8 | ■ | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | ■ | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | ■ | ■ |
| 25 | ■ | 27 | 28 | 29 | 30 |
| ■ | 32 | 33 | 34 | 35 | ■ |

அனுப்புவர் பெயர்:-

..................................................

அனுப்புபவர் விலாசம்;-

..................................................

..................................................

..................................................

அங்கத்தவராயிருப்பின்

இலக்கம் ..............................

(இங்கு வெட்டி, பூர்த்திசெய்து அனுப்பவும்)

**இடமிருந்து வலம்:-**

1 - உலகத்தின் ஒளி
7 - நாங்கள்
10 - அதிகம் பேசுபவன் (தலைகீழாக உள்ளது)
13 - நாட்டிலும் வீசும்; வீட்டிலும் அடிக்கும்! (குழம்பியுள்ளது)
17 - பச்சை நிறம்; கொஞ்சும் (மாறியுள்ளது)
19 - இவர் வீட்டு கவிபாடும் (குழம்பியுள்ளது)
27 - படித்தும் பெறலாம்; பறக்கவும் விடலாம் ( ,, )
32 - இது நல்ல குணமன்று

**மேலிருந்து கிழ்:-**

1 - ஆனைமுகத்தான்
2 - மலர் (குழம்பியுள்ளது)
4 - இரண்டு
5 - தியாகபுருஷர்
12 - நீர் அள்ள தேவைப்படும்
15 - சிறுபுத்தி (குழம்பியுள்ளது)
22 - —— பட்டார் நெஞ்சம்போல் (தலைகீழாக உள்ளது)
29 - வலியெடுத்தால் தடவலாம் (நடு எழுத்து காணவில்லை)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "விஸ்வஜோதி" குறுக்கெழுத்துப் போட்டி

## இலக்கம் 1

அன்புள்ள வாசகர்களே !

விஸ்வஜோதி குறுக்கெழுத்துப் போட்டிக்கு வந்த கடிதங்களின் எண்ணிக்கை எம்மை பிரமிக்க வைத்தது. அனைவரது உற்சாகம் எமக்கு மகிழ்வூட்டுகிறது. இப் போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிப்பதுடன், மேலும் உங்கள் ஆதரவு, உற்சாகம் தொடர வேண்டுகிறோம்.

நாம் குறிப்பிட்டிருந்தபடி, 29.2.88 வரை வந்த விடைகளைப் பிரித்து சரி பார்த்ததில் ஓரிரண்டைத்தவிர மற்றவை யாவும் சரியான பதில்களாகவே இருந்தன. அவற்றைக் குலுக்கி அதிர்ஷ்டசாலியை எடுத்தோம். அந்த அதிர்ஷ்டசாலியின் பெயர், விலாசம் வருமாறு :

**திரு. M. வேதாரணியம்**
53 - 55, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

அதிர்ஷ்டசாலியான திரு. வேதாரணியம் அவர்களுக்கு ஒரு புத்தகம் பரிசாக அனுப்பி வைக்கப்பட்டது. இதனை பெரிய மனதுடன் விஸ்வஜோதிக்கு தந்துதவியவர்கள் :-

**P. S. சுந்தரம் & கம்.**
75, பார்பர் வீதி,
கொழும்பு 13.
தொலைபேசி இல. 28549

விஸ்வஜோதியின் சார்பாக P. S. சுந்தரம் அன் கம்பனிக்கு எங்கள் நன்றி கலந்த வணக்கம்.

---

# அன்றே சேதாரம் உண்டு

மாதவி சோழ சாம்ராஜ்யத்து ராஜநர்த்தகி மட்டுமல்ல, சோழமன்னனின் வளர்ப்பு மகள் அவளுக்கு மன்னன் அன்பு பரிசாக ஓர் தங்க ஆபரணத்தை அளிக்கிறான் அந்த ஆபரணத்தின் நிறை ஆயிரத்து எட்டு கழஞ்சி. இதனை சிலப்பதிகாரத்தின் அரும் பத உரை ஆசிரியர்.

"ஆயிரம் கழஞ்சு பாரியத்திற்கும்
எண் கழஞ்சு அழிவுக்குமாகி நிச்சயித்து"

என்று தெரிவிக்கிறார். இதில் ''அழிவுக்குமாக்கி'' என்பது சேதாரத்தையே குறிக்கிறது. இந்தக் கணக்குப்படி பார்த்தால் இன்றைய ஒரு பவுனுக்கு 0.64 மிலிகிராம் அளவை சேதாரமாயிருக்கும்.

— சுகந்தி பாக்கியநாதன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய ஆயுள் அங்கத்தவர்கள்

L 82 திரு. P. ஜெயபாலன்

L 83 ,, M. பரமசிவம்

L 84 ,, V. தேவகல்யாணி

L 85 ,, K. S. ராஜரட்னம்

L 86 ,, S. சுப்பையா

L 87 ,, R. அன்பரசன்

L 88 திருமதி V. சிவானந்தன்

L 89 திரு. M. தியாகராஜா

L 90 திரு. S. சக்திவேல்

L 91 திருமதி. R. சக்திவேல்

L 92 திரு R. S. தர்மானந்தர்

## புதிய சாதாரண உறுப்பினர்கள்

O 221 திரு. M. சொர்ணலிங்கம்

O 222 ,, K. கணேசன்

O 223 ,, K. லெட்சுமணதாஸ்

O 224 ,, M. கதிர்வேல்

O 225 ,, S நாகராஜா

O 226 ,, V. நவநீதராஜா

O 227 ,, E. சுடலை முத்து ஆச்சாரி

O 228 ,, K. சுப்பையா

O 229 ,, M. உதயகுமாரன்

O 230 ,, T. முத்துவீரசிங்கம்

O 231 ,, M. குமாரவேல்

O 232 ,, K. ராஜலிங்கம்

O 233 ,, M. கணேஸ்குமார்

O 234 ,, K. ஜெயநாதன்

O 235 S [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குத் தெரியுமா?

— ச. நாராயணசாமி —

1. ஆச்சாரி என்னும் சொல் எதைக்குறித்து நிற்கிறது? ஆசான், குரு, உபாத்தியாயன் என்பனவற்றைக் குறிக்கின்றது. பற்பல தொழில்களில் ஈடுபடுபவர்களுக்கு அவர்களுக்குரிய ஆயுதங்களை உற்பத்தி செய்து கொடுப்பதுடன் அந்த ஆயுதங்களை எப்படி உபயோகிப்பது என்பதையும் கற்றுக்கொடுக்க வேண்டும். இதனாலேயே அவர்கள் குருவாகின்றார்கள். ஆசான், உபாத்தியாயன் ஆகின்றார்கள். எனவே எல்லா சாஸ்திரங்களையும் கற்ற சகலசாஸ்திர விற்பன்னர்களாகவும், பண்டிதர்களாகவும் நுண்கலை, நுண்தொழில் விற்பன்னர்களகளாகவும் இருக்க வேண்டும். இதனாலேயே ஜெகத்குருவாகின்றார்கள். குருநாம், குருவிஸ்வகர்மா ஜெகத்குரு என்னும் சுருதி வாக்கியத்திற்கு அமைந்த பொருள் இதுதானே.

2. உங்களுடைய கோத்திரம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?

விஸ்வபிராஹ்மண குலத்தாரின் இல்லங்களில் நடைபெறும் விவாஹம், ஹோமம் சிரார்த்தம், புதுமனை புகுதல் முதலிய நானாவித வைபவங்களின் போதும், ஆலயங்களில் அர்ச்சனை, அபிஷேகம், பூஜை முதலிய கர்ம கலாபங்கள் செய்யும்போதும் உங்கள் புரோகிதரால் சொல்லப்பட வேண்டிய சங்கல்பத்தில் உங்கள் கோத்திரம் என்ன என்பதைத் தெரிந்து வைத்திருக்கிறீர்களா? நூற்றுக்கு தொண்ணூற்றி ஐந்து விகிதபேர் இல்லையென்றே சொல்வீர்கள். இதனால் அநேக இடங்களில் அதாவது விஸ்வ குலத்தவர்களின் வீடுகளில் குருக்கள்மார், இதர ஜாதிமக்களுக்குரிய கோத்திர நாமங்களான சிவ கோத்திரமென்றும், நந்தி கோத்திரமென்றும் சாண்டில்ய கோத்திரமென்றும் சங்கல்பத்தில் சொல்வதைக் கவனித்துள்ளோம். குருக்கள்மாருக்கு தத்தமது கோத்திரத்தைச் சொல்ல வேண்டியவர்கள் நாமே.

ஆனால், சில இடங்களில் குருமார் குறிப்பிட்ட வைபவங்களின்போது ''விஸ்வ பிரம்ம கோத்திரோத்பவாய'' என்று சங்கல்பிப்பதைக் கேட்டுள்ளோம். இது சிவகோத்திரம், நந்தி கோத்திரம் என்பதைவிடச் சற்று பரவாயில்லை. ஆனால் இதுவும் தவறானதே ''விஸ்வபிரும்மம்'' என்பது குலத்தை அடிப்படையாகக் கொண்டது. கோத்திரமென்பது ரிஷிமூலத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆகையால் கீழே காணப்பட்டிருக்கும் நெறிப்படி உங்கள், உங்கள் கோத்திரங்களை இனிமேலாவது தெரித்துகொள்ளுங்கள்.

**பஞ்சப்பிரஹ்மகோத்திரங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. மநு | — கொல்லர் | — | ஸாநகரிஷி கோத்திரம் |
| 2. மயன் | — தச்சர் | — | ஸநாதநரிஷி கோத்திரம் |
| 3. துவஷ்டா | — கன்னார் (ஸ்தபதி) | — | அபுவநஸரிஷி கோத்திரம் |
| 4. சில்பி | — கல்தச்சர் | — | பிரத்நஸரிஷி கோத்திரம் |
| 5. விஸ்வக்கஞன் | — தட்டார் | — | ஸுபர்நஸரிஷி கோத்திரம் |

விஸ்வபிராஹ்மண "அபிவாதனமந்திரம்'' தெரிந்தால் தங்கள் தங்கள் கோத்திரம் தானாகவே தெரிந்துவிடும். அபிவாதனமென்றால் என்ன? தினசரி காலை, மதியம் மாலை வேளைகளில் சந்தியாவந்தனம் செய்யும் விஸ்வபிராஹ்மணர்களுக்கு இது அவசியம் தெரிந்திருக்க வேண்டியது. அடுத்த விஸ்வஜோதி பதிப்பில் இதைப்பற்றித் தெரியப்படுத்துவோம்.

சுபமஸ்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# - சமுதாய நோய் -

இரா. மகாதேவாபத்தர் சண்முகநாதன்

இன்றைய நம் சமுதாயத்திலே சீதனம் எனும் கொடிய நோய், நம்மிடையே புல்லுருவியென ஊடுருவி, நம்மில் எத்தனையோ இளம் கன்னிப் பெண்கள் எதிர்கால வாழ்வு உரிய பருவத்தில் பெறமுடியாமல், வாடிய மலர்களாய், பனித்திட்ட விழிகளுடன், தம் விடியலிற்காக காத்திருக்கின்றார்கள்.

அன்றாடம் பத்திரிகையைப் புரட்டினால்! சீதனக் கொடுமையினால் தற்கொலை, சீதனம் பற்றாக்குறை மருமகள் எரியூட்டப்பட்டாள்; இப்படி துயரச் செய்திகள்

இவையாவும் யாரால் விளைந்தன?

ஏன் இந்த அவல நிலை?

நம் அறியாமை உருவாக்கும் காட்டுமிராண்டித்தனமான கண்மூடித்தனமான இழி செயல்கள் அல்லவா காரணம்.

போற்றி வணங்க வேண்டிய நம் பெண்ணினத்தின் நியாயமான, மனிதாபமிக்க உணர்ச்சிகளை நாமே குழிதோண்டி புதைக்கலாமா? இது சட்டத்தால் திருத்தும் தவறல்லவே. நாமே நம் அறிவை விழித்தெழச் செய்து, நம் அறியாமையை நீக்கவேண்டும்.

சீதனம் எனும் கொடிய நோய் விட்டொழிந்து; நம் பெண்ணினம் அடிமை விலங்கொடிந்து, சுதந்திரமாய் அவர்தம் ஆசாபாசங்களுக்கு ஏற்றவகையில் தம் வாழ்க்கைப் பாதையினை அமைத்துக்கொள்ளச் செய்யவேண்டியது. சமூகத்தில் நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

எனவேதான் இதன் பின்னணியில் நம் இளந்தலைமுறையினரிடையே அறிவு பூர்வமாக விழிப்புணர்ச்சி ஏற்படவேண்டும் என்னும் நல்நோக்கில், ஓர் கதை வடிவமாக, என் கன்னி முயற்சியாக "வாய்ச் சொல்லில் வீரரடி" எனுந் தலைப்பில் கதைவடிவம் உருவாக்கி, இத்தால் தங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

அது ஏற்புடையதெனக் கருதி, விஸ்வஜோதியில் பிரசுரமாகி, யாரேனும். ஒருவரேனும் இது பற்றிச் சிந்திக்கத் தலைப்படுவராகில், அதுவே எனக்கு ஆத்ம திருப்தி இந்தப் பின்னணியில் தாங்களும் பல சிந்தனைக் கட்டுரைகள் எழுத வேண்டும்; அது விஸ்வஜோதி மூலம் நம்மிடையே நம் சமூகத்தில் அறிவு பூர்வமாக விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்பதே என் தாழ்மையான வேண்டுகோள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ச்சொல்லில் வீரரடி

## சிறு கதை எழுதியவர்: இரா. மகாதேவபத்தர் சண்முகநாதன்

கூடத்தில் கடிகாரம் டாண் டாண் என இரண்டு முறை ஒலித்தது. மணி இரண்டு என்றவாறு புரண்டுபடுத்த வாணி, அருகிலிருந்த அன்னை வைதேகிமீது கை போட்டு அணைக்கிறாள். அகப்பட்டது அன்னையல்ல, தலையணை

சற்றே எதிர்ப்புறம் தலையைத் தூக்கிப் பார்க்கிறாள். எதிரே அப்பாவின் அறையில் அப்பாவின் மிரட்டலும் கொஞ்சலும், அதனோடு அம்மாவின் சன்னக்குரலில் கெஞ்சலும் கேட்கின்றன. அந்த ஒலிகளின் நரகவேதனைத் தாளமாட்டாமல் காதுகளைப் பொத்தியவாறு மீண்டும் திரும்பிப்படுக்கிறாள் அருகே தாவணி கலைந்தது கூடத் தெரியாமல் ஆழ்ந்து உறங்கும் அடுத்தவள் சாந்தி அதற்கு அப்பால் வெகு சீக்கிரமே கல்யாணச் சந்தையில் அங்கத்துவம் பெறும் வயதினை எட்டிப் பிடிக்கும் ஆனந்தி

வயதிற்கு வந்து இளமையின் துடிப்புக்களை அனுபவிக்கத் துடித்து இன்பமயமான எதிர்காலத்தை எண்ணிக் காத்திருக்கும் பிள்ளைகளின் நினைப்பின்றி சுகம் காணும் அப்பாக்கள், அதற்கு வழியின்றி மரக்கட்டையாய் இயங்கும் அம்மாக்கள் சே விவஸ்தை கெட்ட ஆண்வர்க்கங்கள்

தன் சுயநலம் கருதி பெண்ணினத்தை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் ஆண் வர்க்கத்தின்மீதே வெறுப்பு ஏற்படுத்துகிறது. 'விதவை' என்ற சொல்லில்கூட பொட்டு வைக்க மறந்துவிட்ட ஈனப்பிறவிகள். பலவாறும் சிந்தனையில் அலைக்கழிந்து எப்போது உறங்கினாளோ தெரியாது.

''வாணி. வாணி எழுந்திரம்மா நேரமாகிவிட்டது'' என்ற அம்மாவின் குரல் கேட்டு இமைகள் கனக்க விழித்துப் பார்க்கிறாள். அதிகாலையிலேயே தலைக்குளித்து ஈரத் துண்டுடன் காட்சிதருகிறாள் அம்மா ஏனோ மகளின் முகத்தை ஏறெடுத்துப் பார்க்கும் தைரியமின்றி

''சீக்கிரம் குளித்துவிட்டு வாம்மா'' என்றபடி சமையலறை நோக்கிப் போகின்றாள்

மணி 8-15 நேரமாகிவிட்டது. 9 மணிக்கு ஆபிஸ் சாப்பிட்டுவிட்டு தெருமுனை வரை நடந்து பஸ் பிடித்து ஆபிஸ் போக வேண்டும். பரபரப்புடன் புடவை உடுத்தி அவசரமாகப் புறப்படுகிறாள்,

''அம்மா. போயிட்டு வாறேன்'' என்றவாறு காலில் செருப்பை மாட்டுகிறாள்.

''வாணி இரம்மா இதோ வந்திட்டேனே'' அம்மாவின் குரல் கேட்டு வாசலில் நிற்கிறாள்.

''இன்றைக்கு 4 மணிக்கெல்லாம் லீவு எடுத்துக்கொண்டு சீக்கிறமே வந்துவிடம்மா'' என்றவாறு தலைகுனிந்து கொள்கிறாள் வைதேகி

''என்ன விசேஷம்? ஓ.. இன்று மறுபடியும் ஓர் பொருட்காட்சியா! உனக்கு எத்தனை முறை சொல்லியிருக்கிறேன். வேண்டாம் இந்த சந்தைக் கடை என்று ஆபீஸ் இண்டர்வியுக்களில் சம்பந்தா சம்பந்தமில்லாத கேள்விகள் கேட்பது போல பெண்ணுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடத் தெரியுமா? பாடத்தெரியுமா? என்று குடித்தனத்திற்கு வேண்டாத கேள்வி எல்லாம் கேட்டுவிட்டு இருக்கும் டிபன்களை மூக்குப்பிடிக்கத் தின்றுவிட்டு, பெண்ணின் மன எழுச்சிகளை யும் தூண்டிவிட்டு, அப்புறமாக பேரம் பேசிவிட்டு, போய் கடிதம் அனுப்புகிறோம் எனும் கல்யாண வியாபாரிகள் ஆண்மகனைப் பெற்றுவிட்டோம் என்ற பெருமை பிடித்தவர்கள், அவர்கள் வந்து போகும் வரை சர்க்கஸ் கோமாளிகள் போலும் ஆடும் பெண்ணைப் பெற்றவர்கள்! சே எத்தனை இழிவானது பெண் ஜென்மம்! கோபத்தால் படபடவென்று பொரிந்து தள்ளுகிறாள்.

''அப்படி எல்லாம் சொல்லாதே அம்மா ஏதோ கடவுள் விட்ட வழி. உனக்கு பின்னால் இருக்கும் உன் தங்கைகளை எண்ணிப்பாரம்மா? வீண் பிடிவாதம் செய்யாதே அம்மா'' என்றவாறு கண்ணீர் உருகிறாள் வைதேகி.

''சரி சரி அழாதே. அப்புறம் உன் இஷ்டம் என் கண்டிஷன் தெரியுமல்லவா. அப்புறம் என்னைத் தொந்தரவு செய்யாதே'' என்றவாறு தெருவில் இறங்கி நடக்கிறாள்.

தெருவில் போகும் இளவட்டங்கள் தலைநரைத்த ஆசாமிகளினதும் கண்ணால் துகி லுரியும் துச்சாத்தனத்தையும் சகித்து பஸ் ஸ்டான்டை அடைகிறாள்.

''டைம் ம்லீஸ்?'' என்றவாறு ஓர் அரும்பு மீசை அசடு வழிகிறது.

முறைத்துப் பார்க்கவும், மெல்ல நழுவியவாறு முணுமுணுக்கிறது: 'திமிர் பிடித் தவள்' என்று எட்டி இழுத்து ஓங்கி அறைய வேண்டும் என்று கைகள் துடித்தாலும், பொது இடத்தில் ரசாபாசமாகிவிடுமே என்று பல்லைக் கடித்தவாறு பொறுமையுடன் எதிர்ப்புறம் நோக்குகிறாள் பஸ் வருகிறதா வென்று.

பாழாய்போன பஸ் வருகிறபாடில்லை. நிமிடங்கள் கரைகின்றன. அதற்குள் பார்வையால் கற்பழித்து விடுகிறார்கள் இந்த நடைபாதை மைனர்கள்.

அப்பாடா வந்துவிட்டது பஸ் நிரம்பிவழியும் நெரிசலூடே ஒருவாறு சிரமப் பட்டு உட்செல்கிறாள். பார்வைகளால் கற்பிழந்து உள்ளே சென்றால், உரசிப்பார்க்கும் இளவட்டங்களின் மத்தியில், சகிப்புத்தன்மையுடன் பிரயாணம் செய்து ஒருவழியாக ஆபிஸ் படியேற, டாண், டாண் என 9 மணி அடிக்கிறது.

மனத்தின் விகாரங்களையெல்லாம் ஓரங்கட்டி வைத்துவிட்டு கடமையில் கவனம் செலுத்த முற்படுகிறாள். ஆயிரம் கவலைகள் இருப்பினும் சிரிப்பால் மற்றவர்களைச் சந்தோஷப்பட வைக்கும் நகைச்சுவை நடிகன் போல, வருவோரை இன்முகத்துடன் வர வேற்கும் வரவேற்பாளர் உத்தியோகம் அல்லவா அவளுக்கு.

ஒரு வழியாக மணி 3 ஆகிறது மானேஜர் அறையை நோக்கி நடக்கிறாள். கதவைத் தட்டி அனுமதி கேட்கவும்.

''யெஸ், கம் இன்'' என்ற குரல் கேட்டு உள்ளே செல்கிறாள்.

''இன்று 2 மணி நேரம் முன்னதாகச் செல்லவேண்டும் அதற்கு உங்கள் அனுமதி தேவை''

''ஓஹோ அப்படியா? என்ன டிபன் இன்றைக்கு?'' வார்த்தைகள் கொச்சை யாக வருகின்றன. பல இடங்களில் டிபன் ருசி பார்த்த அனுபவமோ என மனதிற்குள் திட்டியவாறு மௌனமாக நிற்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பர்மிஷன் கிரான்டட் யூ மே கோ''

''தாங்ஸ்'' என்றவாறு வெளியேறி, பஸ் பிடித்து துச்சாதனர்களின் துரத்தல் களையும் தாங்கிக்கொண்டு, வீடு போய் சேர 4 மணி ஆகிவிட்டது இவள் தலையைக் கண்டதும் தான் அம்மாவின் முகம் மலர்கிறது

'உள்ளே போனதும் சீக்கிரம் முகம், கைகால் கழுவி, அலங்காரம் பண்ணிக் கொள் அவர்கள் வந்துவிட போகிறார்கள்'' என்றவாறு பரபரப்புடன் சமையலறை நோக்கிடப் போகின்றாள் அம்மா.

ஏதோ ஒப்புக்கு அலங்காரம் பண்ணி மனமின்றி காத்திருக்கிறாள் வரப்போகும் கல்யாண வியாபாரிகளை எதிர்நோக்கி.

வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்கிறது. ''வாங்கோ, வாங்கோ'' என்ற அப்பா அம்மாவின் வரவேற்கும் குரல் நாராசமாய் காதுகளில் விழுகிறது. சே, பெண்ணைப் பெற்றுவிட்டாலே எப்படியெல்லாம் கூழைக்கும்பிடு போட வேண்டியுள்ளது யன்னலினூடே எட்டிப்பார்க்கிறாள். அரும்பு மீசையும் கோட்டும் சூட்டும் ஆக ஆள் என்னமோ கம்பீர மாகத்தான் இருக்கிறான். ஆயினும் மனவிகாரங்கள் எப்படியோ என்று சிந்தனை செய்த வாறு அறையினுள் அங்கும் இங்கும் நடைபயில்கிறாள். வெளியே ஹாலில் வழமையான சம்பிரதாய சுகசேமங்களுக்குப்பின் ''பெண்ணை அழையுங்கோ'' என்ற மாப்பிள்ளையின் தாயாரின் குரலைத் தொடர்ந்து

''வைதேகி, வாணியை டிபன் எடுத்து வரச்சொல்லு என்ற அப்பாவின் குரலும் தெளிவாகக் கேட்கிறது?

படபடக்கும் இதயத்துடனும் டிபன் தட்டுடனும் அவர்கள் முன் நிற்கிறாள் - காட்சிப் பொருளாய், வினாடிகள் யுகங்களாய் விசுவரூபமெடுக்க நரகவேதனையுடன் நிற் கிறாள் காட்சிப் பொருளாய் ''இப்படி பெரியவர்கள் காலில் விழுந்து நமஸ்காரம் பண் ணம்மா'' என்ற அப்பாவின் குரலால் வெகுண்டு திரும்ப, அம்மாவின் கெஞ்சலான பார்வைக்கு மசிந்து காலில் விழுந்து நமஸ்கரித்து எழுகிறாள். உள்ளே செல்ல முற்பட,

''எக்ஸ்க்யூஸ் மீ, ஒரு நிமிடம்'' என்றவாறு சிவா என்கிற சிவானந்தன் ஏதோ சொல்ல முற்பட படபடக்கும் இதயத்துடன் அவனை ஏறெடுத்துப் பார்க்கிறாள்.

''படித்த ஆபீஸில் வேலை பார்ப்பவர்கள் இப்படி சங்கோஜப்படுவது ஆச்சரியமான விஷயம் நாங்கள் பெண்ணை மட்டும் தான் பார்க்கவே வந்தோம்; அதுவல்லாது அவள் கொண்டுவரும் சீர்வரிசையை அல்ல திருமணத்தின் பின்னும் நீங்கள் வேலைக்குப் போவதில் எங்களுக்கு எதுவித ஆட்சேபமும் இல்லை. அது உங்கள் இஷ்டம் என அவன் கூறிமுடிக்கவும், இவளுக்கு காற்றில் மிதப்பது போல் ஓர் உணர்வு மணமோ தன் மனச் சிறகை விரித்து வானுயரம் பறப்பதுபோல் ஓர் இனிய உணர்வு பாரதிராஜா படங்களில் வெள்ளையாடை அணிந்த தேவதைகள் புடை சூழ கதாநாயகி ஸ்லோமோஷனில் பறந்து வருவது போல அவள் மனத்திரையில் இனிய காட்சிகள் தோன்றிட, அந்த வினாடிகளில் அவளை பரசவத்தில் ஆழ்த்தியது.

ஓ... இப்படியும் ஓர் ஆண் மகனா? கோபுரமாய் உயர்ந்து நிற்கிறான் சிவா இல்லை, கோபுரமாய் உயர்ந்து நிற்கிறார் சிவா சே... இத்தனை நாளும் எல்லா ஆண்களும் ஒரே மாதிரி என்றெண்ணி ஆண்வர்க்கத்தையே இழிவாக எண்ணி வந்த தன் பேதைமையை எண்ணி வெட்கப்பட்டாள்; மனம் நொந்து கொண்டாள்.

நாளும் நெருங்குகிறது ஆபீஸில் 15 நாட்கள் லீவு எடுத்துக்கொள்கிறாள்.

விடிந்தால் கல்யாணம் நெஞ்சில் இன்பக்கனவுகள் சிறகடிக்க நிமிடங்கள் யுகங் களாய்க் கரைய, அவள் வாழ்வின் இனிய சங்கீதத்தில் பூபாளம் பாடிப் பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலர்கிறது. இனபந்துக்களின் ஆரவாரங்களுக்கு மத்தியில் தேவாதி தேவர்களும் அக்கினியும் சாட்சியாக, பெரியோர் ஆசிகூற, கொட்டுமேளம் முழங்க, அவள் சங்கு கழுத்தில் திருமாங்கல்யம் அணிவிக்கிறான் சிவம். மூன்று முடிச்சு போடும் வேளையில் அவன் கரம் அவள் மேனியில் பட அவள் மேனி ஒருகணம் சிலிர்த்தது. ஓர் இனம்புரியா இன்ப உணர்வுகளை ஏற்படுத்தியது. பலவகைச் சடங்குகளும் சம்பிரதாயங்களும் முடிந்து ஒருவழியாக ஆரவாரம் அடங்குகிறது.

இரவு மணி பதினொன்று

பால் பழத்துடன் தோழியர் புடைசூழ அவர்களின் கேலிப் பேச்சுக்களில் மேலும் முகம்நாணிச் சிவந்து, கணவனின் முகம் கோணாமல் நடந்துகொள் என்ற பெரியவர்களின் புத்திமதிகளையும் செவிமெடுத்தவளாய் அடிமேல் அடியெடுத்து நாணத்துடன் நடக்கிறாள் சாந்தி முகூர்த்த அறையினை நோக்கி.

ஏராளமான கற்பனை உணர்வுகளுடன் இன்ப நினைவுகளுடன் அறையினுள் நுழைய காத்திருந்த சிவா கதவை உட்புறம் தாளிட வெளியே தோழியரின் சிரிப்பொலிகளால் மேலும் நாணிடச் சிவக்கிறாள் வாணி.

"படித்த பெண், இப்படி வெட்கப்படலாமா? வா இப்படி உற்கார்" என்கிறான். நாணம் மேலிட அந்நிய புருஷனிடம் அவன் கணவனே ஆனாலும் பட்டும் படாமலும் அவனருகே அமர்கிறாள். மல்லிகை பூக்களின் வாசனையும் ஊதுபத்தியின் நறுமணமும் அவளைக் கிறங்க வைத்தன.

"என்ன, உம் என்றிருக்கிறாய்? ஏதாவது பேசு" என்கிறான் சிவா. நாணம் மேலிட மௌனமாய் இருக்கிறாள் வாணி பேச்சைத் தொடர்கிறான் சிவா. "வாணி, இது நம்மிடைய ஒளிவு மறைவின்றி மனந்திறந்து பேச ஏற்பட்ட இனிய நல்ல சந்தர்ப்பம் எனவே நீ தயக்கமின்றி பேசு உனக்கு சீர்திருத்தக் கொள்கைகளில் மிகுந்த ஈடுபாடு உண்டாமே. கல்லூரி நாட்களில் பெண் விடுதலை எனும் தலைப்பில் பேச்சுப் போட்டியில் பரிசு கூட வாங்கியிருக்கிறாயாமே. எனக்கும் ஆரம்பத்தில் இருந்தது. அப்புறம் நடைமுறைக்கு அது ஒத்துவராது எனக் கைவிட்டு விட்டேன். அப்புறம், உனக்கு சீதனம் கேட்பது அறவே பிடிக்காது என்றும் எனவே தாலி கட்டுமுன் இதுபற்றி எதுவும் அவள் முன் பேச வேண்டாம் என உன் பெற்றோர் கெஞ்சிக் கேட்டுக்கொண்டனர். அதற்கு மனமிரங்கித்தான் அன்று உன்னைப் பார்க்க வந்தபோதும், ஏன் இன்று தாலிகட்டும் வரை அது பற்றி ஏதும் பேசவில்லை எனினும் எனது தங்கையின் திருமணத்தை முன்னிட்டு நான் கேட்டிருந்த ஐம்பதினாயிரம் ரூபாவையும், அத்துடன் ஸ்கூட்டரும் எப்படியோ சொன்னபடி ஒரு வாரத்தில் தரச்சொல்லு உன் அப்பா வாக்குத் தவறமாட்டார் என்ற தைரியத்தில்தான் தாலி கட்டினேன். ஞாபகப்படுத்தி விரைவில் தரச்சொல்லு ஸ்கூட்டர் இருந்தால் உன்னையும் ஆபிஸில் இறக்கி விட்டு நானும் ஆபீஸ் போக வசதியாக இருக்கும். பஸ்ஸில் போய் வருவது சிரமமாக உள்ளது, என்ன சரிதானே? ஏதாவது பேசு என்கிறான்.

அவளை நெருக்கிட தோளில் கை வைக்கிறான் அவன் கூறி முடிக்கவும், கோபுரமாய் நெடிதுயர்ந்த அவன் உருவம் மண் மேடாகிறது அவன் கரம் கம்பளிப்பூச்சியாய் அவள் தோளை அரிக்க, அவன் கையைத் தட்டிவிட்டு எழுகிறாள். கடைசியில் இவனும் சராசரி மனிதன்தானா?

"நீங்கள் கேட்டதெல்லாம் எனக்குத் தாலிகட்டத்தானே தவிர, என்னைத் தொடுவதற்கு அல்ல தொடுவதற்கும் தொடர்ந்து உங்கள் இச்சைகளின் பிரதிபிம்பங்களாய் நாங்கள் சுமக்கும் உங்கள் வாரிசுகளுக்கும் என்ன விலை தரப்போகிறீர்கள்? சொல்லுங்கள் என்ன விலை தரப்போகிறீர்கள்? பரிவிலே தாயாய், நல் உரையிலே மந்திரியாய் பணியிலோ வேலைக்காரியாய், பள்ளியிலே கணிகையாய், காலமெல்லாம் பணிபுரியும் பெண் வர்க்கத்திற்கு உங்கள் ஆண்வர்க்கம் தரப்போகும் விலை என்ன? சொல்லுங்கள், விலை என்ன?" ஆத்திரம் மேலிட உதடுகள் துடிக்க, உணர்ச்சி கொந்தளிக்க கேள்விக்கணை தொடுக்கிறாள் அடிப்பட்ட நாகம்போல் சீறி எழுகிறது ஆண்வர்க்கப் பிரதிநிதி.

"என்ன நெஞ்செழுத்தடி உனக்கு? " உனக்கு? என்றவாறு அடிக்க கை ஓங்குகிறது. ஓங்கிய கையினைத் தடுத்த...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தாலி கட்டிவிட்டோம் என்ற மமதையில் என்ன வேண்டுமானாலும் பேசலாம், கைநீட்டி அடிக்கலாம், என அதிக பிரசங்கித்தனமாக எண்ண வேண்டாம். ஓர் யதார்த்தமான சிந்தனைக்கு, முடிவிற்கு வாருங்கள் என்ன உம் என்றிருக்கிறீர்கள்? ஏதாவது பேசுங்களேன் என்கிறாள்.

''திமிர் பிடித்தவள், அகம்பாவக்காரி. இவளோடு எப்படிக் குடும்பம் நடத்துவது? இங்கேயே வாழாவெட்டியாக இரு'' என்றவாறு அது வெளியேறியது ஆம் 'அவர்' அது வாகிவிட்டது. சிந்தனைத் திறனும் பகுத்தறிவும் அற்ற நிலையில் அவர், அது ஆவதில் வியப்பில்லையே.

வெளியே கசா, முசா வென்ற பேச்சொலிகள் காதில் விழுகின்றன. பெற்றோரின் கெஞ்சல்கள் கேட்கின்றன. எதனையும் லட்சியம் செய்யாது கதவை உட்புறம் தாளிட்டு விட்டு படுக்கையில் சாய்கிறாள், சற்று முன்வரை மயக்கம் தந்த மல்லிகை மணம் இப்போது அவளை நரகவேதனை செய்தது. பலவாறும் சிந்தனையில் குத்தளித்து எப்போது உறங்கினாளோ தெரியாது.

கண்விழித்துப் பார்க்கிறாள். மணி 8 ஆகிவிட்டது. ஹாலில் யாரையும் காணோம் உள் அறையில், ''கடன்காரி, இப்படிச் செய்துவிட்டாளே, சனியன், பீடை பிடித்தவள்'' என்றெல்லாம் அப்பா திட்டுவதும், ''பாவி இப்படி தலையில் கல்லைத் தூக்கிப் போட்டு விட்டாளே'' என்ற அம்மாவின் புலம்பலும் கேட்கின்றன.

அவளோ எதனையும் லட்சியம் செய்யாது, வழக்கம் போல குளித்து, உடுத்தி, அன்றாட அலுவல்களை முடித்து ஆபீஸ் புறப்படுகிறாள். எப்போதும் போல் அம்மாவிடம் சொல்லிக்கொள்ள உட்புறம் திரும்பியவள் தங்களின் எதிர்காலத்தையும் சேர்த்து பாழாக்கி விட்டாயே என்ற தங்கைகளின் உக்கிரபார்வைகளைத் தாங்க முடியாதவளாய் தெருவில் இறங்கி நடக்கிறாள்.

தெருவில் கூடிப்பேசுவதும், இவள் நெருங்க பேச்சை நிறுத்திக்கொள்வதும், இவள் தாண்டியதும் மீண்டும் தொடர்கிறது அவளைப் பற்றிய விமரிசனம். அவளோ எதனையும் லட்சியம் செய்யாது தொடர்ந்து நடக்கிறாள். வாழ்க்கையின் யதார்த்தங்களை உணர்ந்தவளாய் சலனமின்றி தொடர்ந்து நடக்கிறாள். பஸ் தரிப்பு நிலையம் நோக்கி

காத்திருக்கிறாள் பஸ் வரும் திசையை எதிர்நோக்கியபடி. அப்போது வான் அலைகளில் தவழ்ந்து வருகிறது.

''மாதர் தம்மை இழிவு செய்யும் மாந்தர் தம்
மடமை கொளுத்துவோம்'' என்ற மகாகவி பாரதி பாடல்.

ஏன் பாடினான். கொளுத்துவோம் என்று? வெட்டினால் மீண்டும் துளிர்த்துவிடலாம் அல்லவா? எனவே அடியோடு அழித்துவிட வேண்டும் என்பதற்காகவே மடமையினைக் கொளுத்துவோம் என்றான் பாரதி, எனவே நம் சமுதாய அமைப்பில் சிறைப்பட்டிருக்கும் நம் பெண்ணினத்தை, சீர்திருத்தல் கருத்துக்களைப் புகுத்தி அவர்களைப் சுதந்திரப் பறவைகளாய் சிறகடிக்கச் செய்யவேண்டியது நம் ஒவ்வொருவரினது கடமையாகும்,

படபடவென்று கைதட்டும் கரகோஷமும் சேர்ந்து ஒலியலைகளாய் காற்றில் மிதந்து வருகின்றன. வாணியின் உதட்டில் அவளையும் அறியாமல் புன்னகை அரும்புகிறது. அருகில் ஏதோ பொதுக்கூட்டம் போலும், தாய்க்குலத்தைத் தன்பால் ஈர்க்க ஓர் ஆண்வர்க்கப் பிரதிநிதியின் பசப்புவார்த்தைகள் என்றெண்ணியவாறு தனக்குள் சிரித்துக் கொள்கிறாள்

காத்திருக்கின்றாள் நிர்ச்சலனமின்றி எதிர்வரும் பஸ்வண்டிக்காக அவளது மனநிலையை உணர்ந்தோ என்னவோ அப்போது எதிரே உள்ள தேனீர் கடையொன்றின் வானொலியில் ஒலிக்கிறது மகா கவியின் பாடலொன்று

'' நெஞ்சில் உரமுமின்றி நேர்மை திறனுமின்றி
வஞ்சனை செய்வாரடி - கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி - கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குத் தெரியுமா ?

1. உலகத்தில் 5000க்கு மேற்பட்ட மொழிகள் உள்ளன. அவற்றில் சுமார் 845 மொழிகள் இந்தியாவில் மட்டும் பேசப்படுகின்றன.

2. கிறிஸ்தவ பைபிள்தான் உலகிலேயே அதிகம் விற்பனையாகும் புத்தகம்.

3. உலகில் உள்ள ஒவ்வொருவரும் தன் பிறந்தநாளை குறைந்தபட்சம் அதே தினத்தில் பிறந்த இன்னும் 10,000,000 பேரோடு கொண்டாடுகின்றோம்.

4. உலகில் 350 வகையான பென்சில்கள் உள்ளன. அமெரிக்காவில் மட்டும் வருடத்துக்கு 3,000.000,000 பென்சில்கள் விற்பனையாகின்றன.

5. வருட.மொன்றில் ஒவ்வோருவரும் சுமார் 100 இருத்தல் சீனியை உட்கொள்கிறோம் பலவகைகளிலும்.

6. முதலாவது பவுண்டன் பேனா 1884 ல் கண்டுபிடிக்கப்பட்டது.

7 எஸ்கிமோக்கள் தங்கள் உணவு விறைக்காமலிருக்க ஐஸ்பெட்டியைப் பாவிக்கின்றார்கள்.

8. சாதாரண லைட் பல்ப் சுமார் 750–1000 மணித்தியாலம் எரியக்கூடியது.

9. உலகிலுள்ள அத்தனை நாட்டு முத்திரைகளிலும் அந்நாட்டின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கும், முதன் முதல் முத்திரை வெளியிட்ட பிரிட்டனைத் தவிர.

10. யானையின் எடை 14,000 இறுத்தலாயிருந்தாலும் அதன் மூளையின் எடை 11 இறுத்தல் மட்டுமே.

11. நந்தையில் ஒரு முத்து உண்டாகி வளர சுமார் 7 வருடங்கள் ஆகும்,

12. நம் உடம்பிலுள்ள இரத்தக்குழாய்கள் அனைத்தையும் முனைக்குமுனை அடுக்கி, அளந்தால், அதன் நீளம் 100,000 மைல்களாகும். அதாவது உலகத்தை 4 முறை சுத்தலாம்.

13. 15 வயதிற்குப் பின்னர் மூளை வளர்ச்சி அளவில், நின்றுவிடும்.

14. வளர்ந்த மனிதனுடைய தோலின் எடை 6 இறுத்தல் மூளையின் எடையைப் பார்க்கிலும் இருமடங்கு தோலை உரித்து விரித்து அளந்தால் 18 சதுரசுடி வரை இருக்கும்.

15. தலைமயிரால் கயிறு திரித்தால், அதைக்கொண்டு ஒரு மோட்டார் வண்டியைக்கூட தூக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை விருந்து

1. பணிவைவிடப் பெரிய சொத்து வேறில்லை.

2. பிறரை நாம் கேலி பண்ணலாம். ஆனால் அவர் உள்ளத்தைப் புண்படுத்துவதாக இருக்கக்கூடாது.

3. இறைவன் எமது உள்ளத்தில் மனசாட்சியாகத் திகழ்கின்றான்; இறைவனை நேசிப்பவன் மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு நடப்பான்.

4. அடக்கத்தை உன்னிலிருந்து அகற்றிவிட்டால் அது ஒரு போதும் திரும்பி வராது.

5. ஆசையுள்ளவருக்கு துன்பங்கள் அதிகமாகும்.

6. அன்பு, அடக்கம், மன்னிப்பு இவைகளே உயர்ந்த ஆண்மைக்கும் ஆற்றலுக்கும் அறிகுறிகளாகும்.

7. எதிர்காலத்தை அறிந்துகொள்ள வேண்டுமானால் பழமையை ஆராய்ந்து பார்.

8. பணத்தின் அருமை உனக்குத் தெரிய வேண்டுமானால் வெளியே போய்க் கொஞ்சம் கடனுகக் கேட்டுப்பார்.

9. பேச்சு பெரியதுதான். இருந்தாலும் மௌனம் அதை விடப் பெரியது.

10 எவர் உன்னிடம் பேசுவதையும் கேட்டுக்கொள், ஆனால் சிலரிடமே பேச்சுக்கொடு. எவர் கஷ்டத்தையும் தெரிந்து கொள்; ஆனால் உன் கஷ்டத்தை எவரிடமும் கூறி விடாதே.

செல்வி. சந்திரிகா பரசுராமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாசிப்பழ குளிர்பானம்

தேவையான பொருட்கள் :-

| | |
|---|---|
| அன்னாசிப் பழம் | 1 |
| டின்பால் | 1 |
| லக்ஸ்பிறே | 2 மேசைக்கரண்டி |
| ஜெலடின் | 1 தேக்கரண்டி |
| தண்ணீர் | $1\frac{1}{2}$ பால்டின் அளவு |
| வெனிலா | 2 தேக்கரண்டி |
| கலரிஸ் - மஞ்சள் | 2 - 3 துளிகள் |
| சீனி | 2 மேசைக்கரண்டி |

செய்முறை :-

அன்னாசியை மெல்லிய துண்டுகளாக வெட்டி 2 மேசைக்கரண்டி சீனியும் தண்ணீரும் சேர்த்து அடுப்பில் வைத்து கோதித்தவுடன் இறக்கவும். டின்பாலையும் தண்ணீரையும் சேர்த்து கலந்துகொள்ளவும். சுடுநீரில் ஜெலடினையும் லக்ஸ்பிரே பாலையும் கலந்து டின்பாலுடன் சேர்த்துக்கொள்ளவும். ஒரு அகன்ற பாத்திரத்தில் கொதிநீரை ஊற்றி அதில் டின்பால் கலவையை அதில் வைக்கவும். கலவையில் சூடு ஏறும்வரை கரண்டியால் கிளறிக்கொண்டிருக்கவும். பின் அதை வெளியில் எடுத்து சிறிது ஆறவிட்டு வெனிலா, கலரிஸ் சேர்த்து குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிடவும். பரிமாறும்போது அன்னாசிப்பழ துண்டுகளையும் பாலையும் சேர்த்து பரிமாறவும். அன்னாசிப் பழத்தை மிக்ஸியில் போட்டு எடுக்கவும்.

— செல்வி ஜெ. கந்தசாமி —

(யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழு டிக்கட்டுகளுக்கு மட்டும்

( முடிந்தால் சிரிக்கவும் )

ஒருத்தி: மணமகன் தேவையென்று விளம்பரம் செய்தாயே என்னவாயிற்று?
மற்றவள்: 16 பதில்கள் வந்தன. அத்தனையும் ஒரே பதில்தான்
ஒருத்தி: அதென்ன?
மற்றவள்: ''என்னுடையதை எடுத்துக்கொள்'' ''என்னுடையதை எடுத்துக்கொள்'' என்று.

★ ★ ★

ஒரு பத்திரிகை நிருபர், நாட்டிலேயே அதிகநாள் வாழும் ஒரு பெரியவரை பேட்டி காணச் சென்ருர் பெரியவருக்கு வயது 101 ''நவீன காலத்துப் பெண்களைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?'' என்று நிருபர் விசாரித்தார். அதற்குப் பெரியவர் ''நான் பெண்களைப் பற்றி நினைப்பதை விட்டு இரண்டு வருடங்களாகின்றன'' என்று பதில் சொன்னுர்.

★ ★ ★

மாமா! நான் ஒரு அழகான பெண்ணை ரொம்பவும் விரும்புகிறேன். ஆனல் அவள் என்னை விரும்புகிருளா என்று எப்படி அறிவது? என்று மிகுந்த ஆவலுடன் இளைஞன் கேட்டான்.


''திருமணம் செய்துக்கொள்! திருமணம் செய்துக்கொள்!'' என்று மாமா முழங்கினுர்.

★ ★ ★

என் மனைவி தினமும் தன் தோட்டத்திற்கு மரம், செடி, கொடிகளுடன் மூன்று மணி நேரம் பேசுவாள், ஒரு நாள் ஒரு ரோஜாவிடம், ''நீ எப்படி சகித்துக்கொள்கிருய்?'' என்று விசாரித்தேன். அதற்கு ரோஜா, ''யார் கேட்டுக்கொண்டிருந்தது? '' என்றது.

---

## வெள்ளிக்கிழமை நாட்களில் வீட்டை அழங்கரிக்க அழகான கோலம் :-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— சந்திரிகா பரசுராமன் —

கனம் அங்கத்தவர்களே, வாசகர்களே,

ஏற்கனவே வெளியிடப்பட்ட ''விஸ்வஜோதி'' வெளியீடுகளில் வெளிவந்ததைவிட இந்த இதழில் கட்டுரைகளும், கவிதைகளும் பெருமளவில் பிரசுரமாகியுள்ளன. இதற்குக் காரணம் தங்கள் ஆதரவும், உற்சாகமும், ஒத்துழைப்புமேயாகும். தங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

மேலும் வெளிவரவேண்டியுள்ள இதழ்களுக்கும் தங்கள் கைவண்ணத்தையும், கற்பனைவளத்தையும் தந்து உதவுவீர்கள் என நம்புகிறேன். நல்ல கருத்துள்ள கதைகள், நம் சமூக, சமய தொடர்புள்ள கட்டுரைகள், கவிதைகள், சமையல் குறிப்புகள், மாதர்களுக்கு தேவையான குறிப்புகள். கோலங்கள், துணுக்குகள் எதுவானாலும் எழுதியனுப்புங்கள் தரமானவையாக, இருப்பின் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ''விஸ்வஜோதியில்'' பிரசுரிக்கப்படும்.

அதுமட்டுமல்லாது, தங்கள் அபிப்பிராயங்களை - ஆக்கப் பூர்வமானவற்றை - எழுதி அனுப்ப வேண்டுகிறோம்.

அனுப்பவேண்டிய முகவரி;

**பத்திரிகை ஆசிரியர்**
**''விஸ்வஜோதி;;**
இலங்கை விஸ்வகர்ம சங்கம்,
102, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு-13.

**நன்றி!**

**திருமதி. மல்லிகா தியாகராஜா**
- ஆசிரியை -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BOOK POST

Mr./Mrs. S. ராமசந்திரா
153. புதுச் செட்டித் தெரு
கொழும்பு-13

If undelivered, please return to :-

**CEYLON VISVAKARMA SANGAM**

102, NEW CHETTY STREET,
COLOMBO - 13.

ஸ்பாட்டன் பிரின்ஸ் லிமி., 154, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13. தொலைபேசி 23638

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org